பிளவ்ஸ் கிறீம்ஹவுஸ்
வழங்கும்
**16 வயதினிலே**
பொங்கலன்று
திறந்த வெளியரங்கில்
ராஜா-ஜிக்கி பாடல்களை
ஈழத்து பாலசுப்பிரமணியம்
கலாவதி: சுஜதா ஆகியோர்
பாடுகிறார்கள்.
பிரவேசம்: 10/-5 - 3/-
ரிக்கற்: பூபாலசிங்கம், புத்தகசாலை, நியூ பிளவ்ஸ்.
அறிவிப்பு: மேஜர்ஷண்

பக்கங்கள் 8 ★

# ஈழநாடு
The EELANAADU

50 சதம்

மலர் 21 மார்கழி 20 ஸபர் 15 இதழ் 326
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 4-1-80

RECEIVED 1980-1-4 PERIODICALS DIVISION

சுத்தத்திற்கும், சுவைக்கும் புகழ்பெற்ற
சைவ ஹோட்டல்
தேவி விலாஸ்
சுத்தம், சுவை,
அன்பான உபசரிப்பு
சைவ போசனத்தை
மனதில் என்றும்
தேவி விலாஸ்
(வண்ணைச் சிவன்கோவில் சந்தி)
283 காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

SRI LANKA RECEIVED 1980-1-4 PERIODICALS DIVISION

# இந்திய லோகசபை முதல் கட்ட தேர்தல்
# அமைதியான வாக்களிப்பு;
# சில இடங்களில் குழப்பம்

## உ.பி.யில் மூவர் ஆந்திராவில் இருவர் கொலை
## இந்திரா - சரண்சிங் வாக்களிக்கவில்லை

புதுடில்லி, ஜன. 3

**இந்திய பாராளுமன்றத்தில் 7வது லோகசபைக்கான முதற்கட்ட வாக்களிப்பு. நேற்று ஒரு சில சம்பவங்களைத் தவிர பெரும்பாலும் அமைதியாகவே நடந்துமுடிந்தது.**

உத்தரப் பிரதேசத்தில் இரு கட்சி ஊழியர்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில் மூவர் கொல்லப்பட்டனர்.

தமிழ் நாட்டில் அனைத்திந்திய அண்ணா தி. மு. க. ஊழியர்களுக்கும். தி. மு. க. ஊழியர்களுக்குமிடையில் ஏற்பட்ட கைகலப்பில் 20 பேர் காயமடைந்தனர்.

ஆந்திராவில் இடம்பெற்ற குழப்பங்களில் இருவர் கொல்லப்பட்டதாகவும், பலர் காயம் அடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

நேற்று பகல்வரை கிடைத்த தகவல்களின்படி பஞ்சாப் மாநிலத்தில் மிகக்கூடுதலாக 55ல் இருந்து 60 வீதமும், மிசோராமில் மிகக்குறைவாக 35 வீதமும் வாக்களிப்பு நடந்துள்ளது.

வடகிழக்கில் மிகக்குறைவாகவே வாக்களிப்பு இடம்பெற்றது. உத்தரப்பிரதேசத்தில் திரு. சரண்சிங் போட்டியிடும் லாக்பட் தொகுதியில் சுமார் 60 சதவிகிதம் வாக்குப் பதிவாயிற்று!

திருமதி காந்தி போட்டியிடும் ராய்பரேலியில்மிதமான அளவு வாக்குப்பதிவு இடம் பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

அருணாசல், கோவா டாமன் தீவுகள், பாண்டிச்சேரி சட்ட சபைகளுக்கும் நேற்று தேர்தல் நடைபெற்றது.

ஞாயிற்றுக்கிழமை லோக சபைக்கான இரண்டாம்கட்ட தேர்தல் நடைபெறும்.

நேற்று வாக்களிப்பு இடம் பெற்ற தொகுதிகளின்வாக்குச் சீட்டுகளை எண்ணும் பணிகள் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகும்.

### காந்தியும் சரண்சிங்கும்

நேற்று திருமதி காந்தியும் லோக்தள் தலைவர் திரு சரண் சிங்கும் வாக்களிக்கவில்லை. திரு. சரண்சிங் தேர்தல் பிரசாரத்திற்காகவேறு இடம் சென்று இருப்பதாலும் திருமதி காந்தி வாக்களிப்பதற்குபுதுடில்லிக்கு வரமுடியாமல் போனதாலும் இவர்களினால்வாக்களிக்க முடியவில்லை.

திருமதி காந்தி பிரயாணம் செய்த விமானம் காலநிலை சரியில்லாததால் டில்லியில் இறங்காமல் திரும்பிச்சென்று விட்டது.

ஆந்திராவில் ஹைதராபாத் பழையநகர்பகுதியில்ஏற்பட்ட குழப்பத்தில் ஒருவர் கொல்லப்பட்டார் 33பேர் காயமடைந்தார்கள். ஊரடங்குச்சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

கரீம்நகர் பகுதியில் மார்க்ஸிச 'கம்யூனிஸ்ட்கட்சியினர் பொலிஸ் நிலையமொன்றின் மீது தாக்குதல் நடத்திய போது பொலிஸ் சுட்டதில் ஒருவர் கொல்லப்பட்டார். 7பேர் காயமடைந்தனர். ஜே. ஜனபதிராவ் என்ற கட்சி ஊழியர் ஒருவர்காவலில்வைக்கப்பட்டதால் இந்தக்குழப்பம் ஏற்பட்டது.

உத்தரப் பிரதேசத்தில் முகாரபாத் மாவட்டத்தில் அமுருலா என்ற இடத்தில் இரு கட்சியினர் மோதிக் கொண்டதில் மூவர்கொல்லப்பட்டனர். 8பேர் காயமடைந்தனர்,

## ஆப்கானில் சோவியத் ஊடுருவல்
## இலங்கை அரசு பலத்த கண்டனம்

(கொழும்பு)

அணிசேரா நாடுகளில் ஒன்றான ஆப்கானிஸ்தான் மீது சோவியத் யூனியன் நடாத்தியுள்ள ஊடுருவலை இலங்கை அரசு கண்டித்திருக்கின்றது.

அணிசேரா கோட்பாடுகளில் நம்பிக்கை வைத்துள்ள ஒரு நாடு என்ற முறையில் வெளிநாட்டுத் தலையீடு எதுவுமின்றி தம் தலைவிதியைத் தாமே நிர்ணயிக்கும் உரிமை ஆப்கானிஸ்தான் மக்களுக்கு இருக்கவேண்டுமென்றநிலையை இலங்கை ஆதரிக்கின்றது என்று நேற்று இலங்கை வெளிநாட்டமைச்சு வெளியிட்ட அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானிலிருந்து சோவியத்யூனியன் தன் துருப்புக்களைத் திருப்பியழைக்க வேண்டுமென்று இலங்கை கோரியுள்ளது.

ஆப்கானிஸ்தானில் அந்த நாட்டு நாணயத்துக்குப்பதிலாக சோவியத் யூனியனின் ரூபிள் நாணயம் புகுத்தப்பட்

(8ம் பக்கம் பார்க்க)

## சைக்கிள் திருட்டு, வழிப்பறி போன்ற
## பல திருட்டுக்களில் சம்பந்தப்பட்ட இருவர்
## பொலிஸாரிடம் சிக்கினர்

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரிலுள்ள கடை வாசல் ஒன்றில் இரவு படுத்திருந்த இருவரை சந்தேகத்தின்பேரில் ரோந்து சென்ற பொலிசார் கைதுசெய்துவிசாரணைசெய்தபோது பல இரகசியங்கள் அம்பலமாகின.

தாங்கள் பலவகையான திருட்டுக்கள், வழிப்பறிகளைச் செய்ததாகவும், சைக்கிள்களை திருடியதாகவும் விசாரணையின் போது அவர்கள் ஒப்புக் கொண்டனராம்.

சப்-இன்ஸ்பெக்டர் ஜெயவர்த்தன, பொலிஸ்கான்ஸ்டபிள் நிமலதாஸ் ஆகியோர்

(8-ம் பக்கம் பார்க்க)

## தமிழ்நாட்டில் வாக்களிப்பு:
## சில சுவையான சம்பவங்கள்

சென்னை ஜன.3

தமிழ்நாட்டில் 19 லோக சபை தொகுதிகளுக்கு நேற்று நடைபெற்ற தேர்தலில் சுமார் 55ல் இருந்து 60 சத வீத வாக்காளர்கள் வாக்களித்தனர். இருமுக்கிய சம்பவங்களைத் தவிர பொதுவாக தேர்தல் அமைதியாகவே நடந்தது. ஒரு இடத்தில் அ. தி.மு. க. தொண்டர்களும் தி. மு. க. தொண்டர்களும் மோதிக் கொண்டதில் 20 பேர் காயமடைந்தனர்.

தமிழ்நாட்டில் வாக்களிப்பு நடைபெற்ற தொகுதிகளில் நாகபட்டணம் தொகுதியில் தான் 75 வீத வாக்களிப்பு இடம் பெற்றுள்ளது. சகல தொகுதிகளிலும் வாக்களிப்பு அமைதியாகவே நடைபெற்றுள்ளது, ஆனால் இரு இடங்களில் பூசல்கள் நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

திருச்செந்தூரில் 107 வயது பாட்டியொருவர் வாக்குப் பதிவுசெய்தார். தேனும் பேட்டில் பர்த்தா அணிந்த முஸ்லிம் பெண்கள் திரளாக வந்து வாககளிப்பு செய்தனர்.

நீலகிரிப் பகுதியில் ஒரு மலையடிவாரத்தில் அமைக்கப்பட்டிருந்த வாக்கு சாவடியில் எவருமே வாக்குப் பதிவுசெய்யவில்லை. தங்கள் கிராமத்துக்குப்போகும் வழியில் பவானி ஆற்றுக்கு குறுக்கே பாலம் அமைத்துத்தரஅரசாங்கம்முன் வராததால் இக்கிராம மக்கள் வாக்களிக்கவில்லை.

பத்தமடை என்ற கிராமத்தில் 11 பார்வையிழந்தவர்கள் வரிசையாக வந்து வாக்களித்தனர். சேரமா தேவியில் அரசடி தெற்கு தொகுதியில் வசிக்கும் ஆறுமுகத்தம்மாள்

(8-ம் பக்கம் பார்க்க)

## யாழ். மாநகரசபை
# களஞ்சிய பகுதித் திருட்டு முயற்சி முறியடிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் மாநகரசபை களஞ்சியப்பகுதியில் நேற்று முன்தினமிரவு நடந்த திருட்டு முயற்சி முறியடிக்கப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின்பேரில், 5 இளைஞர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதுபற்றி யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு புகார் செய்யப்பட்டதை தொடர்ந்து பொலிசார் தீவிர விசாரணையில் இறங்கியுள்ளனர்.

நேற்று முன்தினமிரவு களஞ்சியப்பகுதி அறையில் சத்தம் கேட்டதை தொடர்ந்து காவலாளி அவ்விடத்திற்கு சென்ற போது சாமான்களைபோட்டு விட்டு ஓடிவிட்டதாக கூறப்படுகிறது.

களஞ்சியப்பகுதியின் பின் பக்கத்திலே இத்திருட்டு முயற்சி நடைபெற்றுள்ளதாக கூறப்படுகிறது.

திருட்டுப்போனதாக கூறப்படும் சாமான்களை களஞ்சிய பகுதி பின்பக்கத்திலிருந்து பொலிஸார் மீட்டுள்ளனர்.

சீமெந்து பைக்கற், பலகைகள், கம்பிகள், தும்புக்கட்டைகள் ஆகியவை திருட்டுப் போன சாமான்கள் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

யாழ். பொலிஸ் நிலைய இன்ஸ்பெக்டர் எஸ். திருச்சிற்றம்பலம், உதவிப்பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு, பீறேமதாசா, கான்ஸ்டபிள் குணரட்னம் ஆகியோர் இத்திருட்டுச் சம்பந்தமாக தீவிர புலன்விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

(கொ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடியியல்சட்டக் கோவையின் 16-ம் பிரிவின் கீழ்
## அறிவித்தல்

### ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றில்

1. சப்பையா நாகேசு
2. தம்பிமுத்து மனோகரன்
3. தில்லையம்பலம் பஞ்சாட்சரம் எல்லோரும்
2-ம் வட்டாரம், வடலிந்தோட்டம் ஒழுங்கை, புங்குடுதீவு.
தங்களுக்காகவும் 2-ம் ட்டாரத்தில் வசிப்பவர்களும் வழக்கில் சம்பந்தப்பட்ட பாதையை பாவித்து வந்தவர்களுக்காகவும்.

வழக்காளிகள்

வழக்கு இல. காணி/12

எதிராக

1. கதிரித்தம்பி தருமலிங்கமும் பெண்
2. காவேரியம்மாவும் இருவரும்
2-ம் வட்டாரம், புங்குடுதீவு
3. விசேட ஆணையாளர், புங்குடுதீவு கி. ச.
4. புங்குடுதீவு கிராமச்சபை

எதிராளிகள்

மேற்குறித்த வழக்காளிகள் தங்கள் சார்பிலும் 2-ம் வட்டாரத்தில் வசிப்பவர்களும் வழக்கில் சம்பந்தப்பட்ட பாதையைப் பாவித்து வந்தவர்கள் சார்பிலும் ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றத்தில் இவ்வழக்கை குறித்த எதிராளிகளுக்கு எதிராக கீழ்க்காணும் நிவாரணங்களைப் பெறுவதற்கு ஒரு வழக்கைத் தொடருவதற்கு உத்தரவு கோரி உள்ளார்கள்.

### நிவாரணங்கள்

1. இதன் கீழ் அட்டவணை "ஆ"வில் நன்கு விபரிக்கப்பட்டிருக்கும் காணி ஓர் பகிரங்க ஒழுங்கை என்று பிரகடனப்படுத்தவும்.
2. இதன் கீழ் அட்டவணை "ஆ"வில் நன்கு விபரிக்கப்பட்டிருக்கும் காணியில் இருந்து 1-ம், 2-ம் எதிராளிகளையும் அவர்களது முகவர்கள் வேலையாட்கள் யாபேரையும் வெளியேற்றும்படியும்.
3. இதன் கீழ் அட்டவணை "ஆ"வில் நன்கு விபரிக்கப்பட்டிருக்கும் காணியை ஒழுங்கையாய்ப் பாவிப்பதற்கு எவ்வித தடையும் வைக்கக்கூடாதென்று கட்டளையும்.
4. இதன் கீழ் அட்டவணை "ஆ"வில் நன்கு விபரிக்கப்பட்டிருக்கும் காணியின் வடக்குத் தெற்கு வேறு எங்கும் வேலி போட அல்லது எவ்வித தடை வைக்கக்கூடாதென்றும் 1ம், 2ம் எதிராளிகளைக் கட்டுப்படுத்தும் ஓர் நிரந்தரக் தடைக் கட்டளையும்.
5. இதன் கீழ் அட்டவணை "ஆ"வில் நன்கு விபரிக்கப்பட்டிருக்கும் காணியில் 1-ம், 2-ம் எதிராளிகளுக்கெதிராக மேலே கூறியவாறு இவ்வழக்கு முடிவடையும்வரை அமுலில் இருக்கக்கூடிய ஓர் இடைக்காலத் தடைக்கட்டளையும்.

ஆகவே மேற்குறித்த வழக்கில் அக்கறையுள்ளவர்கள் யாபேருக்கும் இந்த வழக்கு தாக்கல் செய்து தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறதென்பதை இத்தால் அறியத்தருகிறோம்.

1979-ம் ஆண்டு மார்கழி மாதம் 6-ந் திகதி.

நிமன்றக்கட்டளைப்படி
த . குலஞானம்,
பதிவாளர்.

### மேற்குறித்த ஆதனடாப்பு "ஆ"

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி புங்குடுதீவுக் கோவிற்பற்று புங்குடுதீவு மேற்கிறை "வடலித்தோட்டம்" கிட்டத்தட்ட குளி 12 இதற்கெல்லை கிழக்கு முருகேசு கனகரத்தினத்துக்கும் பெண் பராசக்திக்குமுரிய ஆதனம், வடக்கு யாழ்ப்பாணம் இறுப்பிட்டி பகிரங்க வீதி, மேற்கு 1-ம், 2-ம் எதிரிகளுக்குரிய காணி, தெற்கு ஒழுங்கை இதடங்கலும்.

தா. குலஞானம்,
பதிவாளர்.

4547


# வைத்திலிங்கம்ஸ்

∵ உறுதியானதும்
∵ நீடித்து உழைப்பதும்
∵ தன்னிகரற்றதுமான

'றிவர்' பிராண்ட்

கல்வனைஸ்ட் இரும்புத் தகடுகள்

பிரதான விநியோகஸ்தர்களும் இரும்புப் பொருட்கள் விற்பனையாளர்களும்

என். வைத்திலிங்கம் நிறுவனத்தார்

450, பழைய சோனக தெரு,
கொழும்பு - 12

தொலைபேசி: 33143-4

கிளை 138, ?. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 530


## இன்றைய பலன்

மார்கழி மாதம் 20-ம் திகதி
வெள்ளிக்கிழமை
4-1-1980

மேடம்: வாழ்க்கையில் கடல் கடந்த பிரயாணம் ஒன்றும் மேற்கொள்ளப்படலாம். குடும்ப மகிழ்ச்சியுண்டு. தொழில் துறையிலும் சிறப்புக்காணும்.

இடபம்: மக்கள் புகழ்பரவும் வரவில் திருப்தியுடன் வாழ்விலும் சுகமுண்டு. அதிர்ஷ்டகரமான தினம்.

மிதுனம்; விவசாயத்துறையின்மூலம் நஷ்டமடைவதற்கிடமுண்டு. நன்மையான காயங்களை இன்று பின் போடவும். சுகாதாரம் வேண்டும்.

கடகம்: கடமையில் சோர்வுக்கிடமுண்டு. உற்சாகம் குன்றும். நண்பர்களின் நச்சரிப்புக்கும் ஆளாகுவீர்கள். வேண்டுவது பொறுமையே.

சிங்கம்: நண்பர்கள் மூலம் பரவசட்டடுத்தும் செய்திக்கிடமுண்டு. வாழ்விலும் சுபதினமாகும். தொழில் துறையிலும் நன்மாற்றத்திற்கிடமுண்டு.

கன்னி: கண்துடைப் வேலைகள் ைபெறலாம். சகோதர வேற்றுமைகளுக்கு இடமளிக்கும். மன அடக்கமே நன்று.

துலாம்: அறவழியில் நாட்டம் பிறக்கும். குடும்ப சுகமுப் உண்டு. தாய்வழிச் செய்திக்கு இடமேற்படலாம்.

விருச்சிகம்: காதலர்களுக்கு கனகுஷியான தினம். கடமையும் சிறக்கும். வரவிலும் திருப்தி உண்டு.

தனுசு: அரச பயத்திற்கு இடமுண்டு. எதிரிகள் விடயத்தில் கவனம் செலுத்தவும். உடல் நலனைப்பேணிக் கொள்ளவும்.

மகரம்: நன்மைதரும் பிரயாணம் ஒன்று மேற்கொள்ளப்படலாம். வாழ்க்கையும் ெமாகும். களஸ்திரவழிப் பேறுமையும் உண்டு.

கும்பம்: கடன் தொல்லைகளால் பாதிக்கப்படுவீர்கள். எதிர்பாராத விபத்தும் ஏற்படலாம். போக்குவரத்து விடயத்தில் அவதானம் வேண்டும்.

மீனம்: இரக்கசிந்தை மேலோங்கும். பிதாவழி வரவுக்குமிடமுண்டு. வாழ்க்கையிலும் ஒளி பிரகாசிக்கும்.

திருமலை
க.வேலுப்பிள்ளை

## நூலகவியல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கை நூலகச் சங்கத்தின் வடபிரதேசக் கிளையினர் இம்மாதம் 19-ந் திகதி யாழ்ப்பாணம் பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நூலகவியற் கருத்தரங்கொன்றை நடாத்துவதற்கு பூர்வாங்க ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இக்கருத்தரங்கில் இலங்கை நூலகச்சங்கத்தலைவர் திரு. பீலிக்ஸ் சமரநாயக்கா கௌரவ அதிதியாகக் கலந்து கொள்ளவுள்ளார்.

இக்கருத்தரங்கில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகர் திரு.ஆர். எஸ். தம்பையா பேராசிரியர் கா.இந்திரபாலா திரு. ஆ. சிவநேசச்செல்வன் திரு. கா. மாணிக்கவாசகர், திரு. வி. பாக்கியநாதன் திரு. ஜீவன் சின்னையா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர் கருத்தரங்கு சம்பந்தமான ஒழுங்குகளை நூலகச்சங்க வடபிரதேச ஆட்சிக்குழு உறுப்பினர் திரு. கா. மாணிக்கவாசகரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக [illegible] திரு. ஆ. சிவநேசச்செல்வனும் மேற்கொண்டு வருகின்றனர்.

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

யாழ்ப்பாணம் கட்டிடத் திணைக்களத்திற்குசொந்தமான 22/139 [டிபாட்மென்ட் நம்பர் 140-B-014] இலக்கத்தையுடைய லொறியின் தினப்பதிவுப் புத்தகம் 02-01-80ல் குருநகருக்கும், பண்ணைச் சந்திக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கட்டிடத் திணைக்களத்திலோ அல்லது அண்மையில் உள்ள பொலிஸ் நிலையத்திலோ சமர்ப்பிக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். சாரதி அந்தோனிப்பிள்ளை. 4562

### விற்பனைக்கு

"யாழ்ப்பாண முஸ்லிம்கள் வரலாறும், பண்பாடும்" ரூபா 10/-; ஆனந்தா வாரக் கலண்டர் ரூபா 5/-; சகல நூல்களும் விற்பனைக்குண்டு. எஸ். கிருஷ்ணசாமி, 33, பெரியகடை, [பழைய மார்க்கட் முகப்பு] யாழ்ப்பாணம். 4551

சணல் விதை தொகையாய் உண்டு. விலை கோரவும். தொடர்பு கொள்க, க. செல்லையா, இல: 3, கனகபுரம், கிளிநொச்சி. 4556

யாழ். புகையிரத நிலையம், ஸ்ரான்லி வீதி என்பவற்றுக்கு அண்மையில் இராசாவின் தோட்ட வீதி லேனில் 1½ பரப்புக்காணி கல்வீட்டுடன் விற்பனைக்குண்டு. G. M. பொன்னுத்துரை, 191, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 4557

### CLASSES

Cake making and Novetly Cake Icing classes begin Saturday 5th. 61, Colombogam Road, Chundikuli. 4553

### பயிற்சி

3 மாத மோட்டார் மெக்கானிக் டிப்பிளோமா பயிற்சி 3 மாத மின்னியல் டிப்ளோமா பயிற்சி 10-1-80 ஆரம்பமாகின்றன. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னொலொஜி 11 B, மொம்சாக் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 4539

## அறிவித்தல்

### மின்சாரத்தடை

இலங்கை மின்சார சபையினரால்சில அத்தியாவசிய திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட இருப்பதால், 06-01-1980-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8·00 மணியிலிருந்து மாலை 5-00 மணிவரையும் மின்சார நிலையத்திலுள்ள யாழ்ப்பாண பட்டின உப-மின் நிலையத்திலிருந்து மின் விநியோகம்பெறும் பாவனையாளர்களுக்கு மின்சாரம் தடைப்படும் என்பது முன்கூட்டியே இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

?. சிவஞானம்,
ஆணையாளர்,
யாழ். மாநகராட்சி மன்றம்.

மாநகராட்சி மன்ற
அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
02-01-1980. 4554

## 2-வது சிரார்த்த தினம்

4-1-1980



தம்பையா
செகநாதபிள்ளை
[ஓய்வுபெற்ற நீர்ப்பாசன இலாகா D. O. A.]

தோற்றம்: 11-8-1915 மறைவு: 27-12-1977

எங்கள் குடும்பத் தலைவரே! எங்கள் குறைகளைத் தீர்த்து வைத்த குலதெய்வமே! இனி எப்பிறப்பில் உங்களைக்காணப் போகிறோம். நீங்கள் மறைந்து ஈராண்டுகள் ஆகியும் எங்கள் நெஞ்சை விட்டகலவில்லையே. எங்கள் ஒளிவிளக்கு அணைந்து இப்பொழுது இருள்சூழ்ந்த உலகத்தில் வாழ்கிறோம்.

இங்ஙனம்
தங்கள் நெஞ்சத்தில் உறைந்திருந்த மனைவியும், தாயும்,சகோதரிமாரும், மைத்துனர்மாரும், மருமக்களும்.

சந்தை வீதி, உடுப்பிட்டி
45?2

## பதவிஉயர்வு

(பண்டத்தரிப்பு)

யாழ் சமூக சேவைபகுதியில் கடந்த பல ஆண்டுகளாக சமூகசேவை உத்தியோகத்தராக கடமை யாற்றிய திரு. எம். இராஜசிங்கம் யாழ். குடும்ப நீதிமன்றத்தில் குடும்ப ஆலோசகராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

யாழ். சமூக சேவைப்பகுதி உதவி அதிபர் திரு. கே. கங்காதரன் தலைமையில் சமூக சேவைப்பகுதி ஊழியர்கள் சார்பில் அன்னாருக்கு பிரிவு உபசாரவிழாசிறப்பாக நடாத்தப்பட்டது.

......

## காணித்தகராறு: இருவர் காயம்

(மாவிட்டபுரம்)

காணிப் பிரச்சினை காரணமாக இரு குடும்பத்தைச்சேர்ந்தவர்களிடையேஇடம்பெற்றமோதலில் இருவர் பலத்த காயமடைந்த சம்பவமொன்று மாவிட்டிபுரத்தில் நிகழ்ந்துள்ளது.

காயமடைந்த கர்லைதயா ஜெயலட்சுமி, சிவதம்பு ஆகியோர் தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறைப் பொலிசார் இதுகுறித்து விசாரணை செய்துவருகின்றனர். (*)

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## நினைவாஞ்சலி

### திரு. ம. சா. இராஜசிங்கம்

தோற்றம்: 8- 4- 1916 மறைவு:4-1-1972

கோப்பாயைச் சேர்ந்த திரு. மயில்வாகனம் சாமுவேல் இராஜசிங்கம் (முன்னாள் மேலதிக யாழ் மாவட்ட விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர்). அன்னாரின் ஆன்மா இறைவன் திருவடியில் என்றும் அமைதிபெற பிரார்த்திப்போம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்
பாக்கியவாசா,
கோப்பாய். 45??

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

ஓர் இலட்சியத்தைக் கடைப்பிடியாது வாழ்பவன் சுக்கானில்லாத கப்பலுக்கு நிகரானவான்.

- காந்திமகான்

## மக்கள் கருத்து

## போக்குவரத்து நெருக்கடி

வடபிரதேசத்தில் போக்குவரத்து நெருக்கடி மிகவும் அதிகரித்துள்ளது. மக்கள் பெரும் தொகையாக தினமும் [illegible]துக்கிடம் சென்று வருகிறார்கள். தங்களுடைய கடமைகளை நிறைவேற்றுவதற்குப் போக்குவரத்துச் சாதனம் இன்றியமையாத ஒன்றாக விளங்குகின்றது. குறிப்பாகப் பாடசாலைப் பிள்ளைகளும் அலுவலக ஊழியர்களும் இன்று பெரும் தொகையாக பஸ்களிலேயே போக்குவரத்துச் செய்கின்றனர்.

எரிபொருளின் விலையேற்றம் காரணமாக முன்பு கார்களில் பிரயாணம் செய்தவர்கள் கூட இன்று பஸ்களிலேயே பிரயாணத்தை மேற்கொள்கின்றனர். இன்றைய போக்குவரத்து நெருக்கடிக்கு எரிபொருள்களின் விலையேற்றமே பிரதான காரணமாகும். இப்போக்குவரத்து நெருக்கடியைக் கூடியளவு பஸ்களைச்சேவை யிலீடுபடுத்துவதின் மூலமே தவிர்த்துக் கொள்ளமுடியும் இன்றைய அரசாங்கம் தனிப்பட்டவர்களுக்கும் போக்குவரத்துச் சேவையை மேற்கொள்ள அனுமதி அளித்திருப்பது வரவேற்கத்தக்கதாகும். இதன் மூலம் போக்குவரத்து நெருக்கடியை ஓரளவு குறைக்கக் கூடியதாக இருக்கின்றது. அத்துடன் தனிப்பட்டவர்கள் வான் மினிபஸ் போன்றவற்றை இறக்குமதி செய்தால் அவர்களுக்கு தீர்வையைக் குறைக்க முன்வந்திருப்பதும் போக்குவரத்து பிரச்னையை பெருமளவு தீர்க்க உதவுமெனலாம். வெளிநாடுகளிலிருந்து பெருமளவு மோட்டார் சைக்கிள்களையும் ஸ்கூட்டர்களையும் இறக்குமதி செய்துள்ளதன் காரணமாகத் தனிப்பட்டவர்கள் இன்று அவற்றை குறைந்த விலையில் வாங்கிப்பயன்படுத்தக் கூடியதாக விருப்பதும் போக்குவரத்து நெருக்கடியை ஓரளவு குறைத்துள்ளதென்றே கூறலாம்.

வடபிரதேசத்திற்கு அண்மையில் 25 பஸ் வண்டிகள் அனுப்பப்பட்டமை அங்குள்ள போக்குவரத்து நெருக்கடியைத் தவிர்க்கப் போதுமானதென்று கூறமுடியாது. ஆகவே இங்கு ஏற்பட்டுள்ள போக்குவரத்துப் பிரச்னையை இன்னும் கூடுதலான பஸ்களை அனுப்பி வைப்பதின் மூலமே தீர்த்துவைக்கமுடியும். இது குறித்து அரசாங்கமும் இலங்கைப் போக்குவரத்துச்சபையும் கவனம் செலுத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டால் அது பயனுள்ளதாகவிருக்கும். காலையில் பாடசாலை மாணவர்களும் அலுவலக ஊழியர்களும் பெருமளவில் பஸ்களில் பிரயாணம் செய்வதால் காலை நேரங்களில் கூடுதலான பஸ்களை சேவையிலீடுபடுத்த இலங்கையின் வடபிரதேசப் போக்கு வரத்துச்சபை முன்வரவேண்டும்.

தேவையற்ற நேரங்களில் கூடுதலான பஸ்களை சேவையிலீடுபடுத்துவதைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

காலையில் பெரும்தொகையான பாடசாலைப்பிள்ளைகளும் உத்தியோகஸ்தர்களும் பஸ்கள் குறைவாக ஓடுவதால் குறிப்பிட்ட நேரத்துக்கு பாடசாலைக்கோ அலுவலகத்திற்கோ செல்லமுடியாது கஷ்டமடைவதை இலங்கை போக்குவரத்துச் சபை கவனத்தில் கொள்ளவேண்டும்.

பரீட்சை நடைபெறும் காலங்களிலும் இ. போ. ச. சிறந்த பஸ் சேவையை நடத்த வேண்டும். அப்பொழுது தான் பரீட்சை எடுக்கும் மாணவர்கள் குறிப்பிட்ட நேரத்தில் பரீட்சைக்குச் செல்ல முடியும். சிலசமயங்களில் போக்குவரத்துச் சீராக இல்லாத காரணங்களினால் மாணவர்கள் காலம் தாழ்த்தியே பரீட்சை மண்டபங்களுக்குச் சென்று பரீட்சை எழுதப் போதியளவு நேரம் கிடையாது கஷ்டப்படுகின்றனர்.

எனவே மக்களின் பெரும் பிரச்னைகளுள் ஒன்றான போக்குவரத்துப் பிரச்னையை கவனத்துக்கு எடுத்துத் தீர்த்துவைக்க அரசாங்கம் மேலும் நடவடிக்கைகளை எடுத்தால் அது பயனுள்ளதாக அமையும். மத்திய கிழக்கு நாடுகள் அண்மையில் எரிபொருளின் விலையை மேலும் கூட்டியுள்ளதால் இலங்கையிலும் எண்ணெய் விலை அதிகரிக்கும் அப்போது மேலும் போக்குவரத்து நெருக்கடியை எதிர்நோக்கக் கூடிய சந்தர்ப்முண்டு. ஆகவே அதற்கான வழிவகைகளை இப்பொழுதே அரசாங்கம் மேற்கொள்வது பயனுடையதாகும்.

**தி. வெற்றிவேலுப்பிள்ளை**
**வட்டுக்கோட்டை.**

# சாதனைவீரர் ஆனந்தன்

## அரசு இவரை கௌரவிக்குமா?

புத்தாண்டு பிறந்துவிட்டது.

புத்தாண்டின் ஆரம்பத்திலேயே உலகசாதனை ஒன்றை முறியடித்துவிட்டார் 'ஆழிக்குமரன்' ஆனந்தன்.

நாட்டிற்கும் வீட்டிற்கும் பெருமைதேடித்தரும் வகையில், ஆனந்தன் நினைத்ததை முடிக்கிறார். இதுவரை ஆனந்தன் ஆறு சாதனைகளை நிலைநாட்டியுள்ளார். புதியது-இது ஏழாவது சாதனை. இன்னும் சில சாதனைகளைச் செய்வேன்' என்று உறுதியுடன் கூறுகிறார்.

### -- அந்தனிஜீவா --

''போல் டஞ்சிங்'' என்ற, இடைவிடாது பந்தடிக்கும் உலகசாதனையைத்தான் ஏழாவது சாதனையாகச்செய்து முடித்துள்ளார்.

1950ம் ஆண்டு ஆஸ்திரேலியா நாட்டைச்சேர்ந்த ரொன்ரெனல்வ் என்ற வெள்ளையர் இந்த 'போல் பஞ்சிங்' என்ற இடைவிடாது பந்தடிக்கும் விளையாட்டில் ஈடுபட்டு 125 மணித்தியாலம் 20 நிமிடம்வரை தொடர்ச்சியாக விளையாடி உலகசாதனை ஒன்றை நிலைநாட்டினர்,

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக முறியடிக்கப் படமுடியாமலிருந்த இந்தச் சாதனையை வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த 17பேர் முயற்சி செய்து 87மணி நேரம் பந்தடித்து தோல்விகண்டுள்ளார்கள். ஆனல், சாதனை வீரரான ஆழிக்குமரன் ஆனந்தன்5நாட்கள் இரவுபகலாக ஆடியபடி பந்தடித்து, 25 வருடங்கள் முறியடிக்க முடியாமல்போன சாதனையை முறியடித்து உலக நாடுகளில் இலங்கைத்திருநாட்டிற்கு உன்னத பெருமையைத் தேடிக்கொடுத்துள்ளார்.

ஏற்கனவே இவர் நிலைநாட்டிய சாதனைகளில் மூன்று சாதனை உலகசாதனைகளைப் பற்றிய விபரங்களைக்கொண்ட 'கினஸ்' புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

எட்டாவது சாதனையை, பிறந்த இடமான யாழ்ப்பாணத்தில் செய்துகாட்ட முடிவு செய்துள்ளார். பலரின் வேண்டுகோளுக்கிணங்க ஒன்பதாவது சாதனையை தமிழ்நாட்டில் புரிய எண்ணியுள்ளார்.

உலக வரலாற்றில் இது வரை எவரும் இரண்டுக்கு மேற்பட்ட சாதனைகளைப் புரிந்ததில்லை. ஆனல் ஆழிக்குமரன் ஆனந்தனே... ஏழு-சாதனைகளை நிலைநாட்டிவிட்டார்!

சின்னஞ்சிறு வயதிலிருந்தே தான் சொன்னதைச் செய்து காட்டிய ஆனந்தன் இன்னும் சில சாதனைகளைச் செய்வார் என்று நிச்சயமாக நம்பலாம்.

இத்தகைய சாதனைவீரரை நம்மவர்கள் இன்னும் புரிந்து கொள்ளத் தவறிவிட்டார்கள் என்று எண்ணும்போது சற்று வேதனையாகத்தான் இருக்கிறது.

அரசு இவரைதேசியசொத்து என்று கௌரவிக்கவேண்டும். இவரைக் கௌரவிப்பதன் மூலம்தான் இன்னும்பலசெயற்கரிய செய்யும் சாதனை வீரர்களை நம்நாடு பெற்றெடுக்க முடியும். இது நடக்குமா?

# நடிகர்கள் அரசியல் வாதிகளாக மாறமுடியாது ! : நடிகர்நாகேஷ்கூறுகிறார்

(புலோலி)

''இலங்கை ஒரு சிறிய நாடு. எனவே இங்கு வாழும் மக்கள் ஒற்றுமையாக வாழ வேண்டும். தமிழ் - சிங்கள மக்களுக்குள் நல்லுறவு பலமடையவேண்டும். இரு இனங்களுக்கிடையேயும் உள்ள நல்லுறவு, சகோதரத்துவம், ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பரஸ்பர நல்லெண்ணம், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை என்பனவற்றில்தான் தங்கியுள்ளது. சிங்கள மக்கள் தமிழ்மக்களுக்கு விட்டுக்கொடுக்கவேண்டும். தமிழ் மக்களிடம் மன்னிக்கும் மனப்பான்மை இருக்கவேண்டும். இங்கு வாழும் இரு இனங்களுக்கும் இடையில் வேறு யாரையும் நுழைய விட்டுவிட வேண்டாம்''

இவ்வாறு வடபகுதியில் இருந்து தமிழ்-சிங்கள நல்லுறவை வளர்க்குமுகமாக வென்னப்புவவிற்குச் சென்ற நல்லுறவுத் தூதுக்குழுவினரைக் கௌரவிக்குமுகமாக கடற்றொழில் அமைச்சர் திரு. பெஸ்ரஸ் பெரேரா தலைமையில் வென்னப்புவ சென். யேசுவாஸ் கல்லூரியில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய தென்னிந்திய திரைப்பட நடிகர் ஜெய்சங்கர் குறிப்பிட்டார்.

நகைச்சுவை நடிகர் நாகேஷ் உரையாற்றுகையில்:

''சிங்கள-தமிழ் மக்களுக்குள் வேறுபாடு இருக்கிறதென்பதை தான் மறுக்கிறேன். இன்றுயாழ்ப்பாணத்திலிருந்து தமிழ்மக்கள் இங்குவந்து இந் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதைப்பார்க்கும்போது மிகவும்மகிழ்ச்சியாகஇருக்கின்றது யாழ்ப்பாணத்திலிருந்துவந்த அன்பர் ஒருவர் எனக்கு பாக்கு கொண்டுவந்துதந்தார். அங்கிருந்துகொண்டுவந்த பாக்கு கசப்பாக இருக்கவில்லை. அது போல சிங்களநாட்டிற்குதமிழ் மக்கள் வந்தால் அவர்கள் கசந்துவிட மாட்டார்கள். சிங்களமக்களும் தமிழ்நாட்டிற்குசென்றுர். அவர்களும் வந்துவிடமாட்டார்கள். தமிழ் மக்கள் 8 மாதத்திலும்சிங்கள மக்கள் 12 மாதத்திலும்பிறந்தவர்கள்அல்ல. இரு இனத்தீவரும் 10 மாதத்திலேயே பிறந்தவர்கள். உங்கள்தாய்நாட்டு மண்ணை மதியுங்கள். அரசியல்வாதிகளெல்லாம் நடிகர்களாகிவிடமுடியாது. அதே நேரம் நடிகர்கள்எல்லாம் அரசியல்வாதிகளாகிவிட முடியாது''என்றுர்.

நடிகர் ஜெயச்சந்திரன், நடிகை ராதிகா ஆகியோரும் உரையாற்றியதை அடுத்து ஜெய்சங்கரும், நாகேசும் நாடகம் ஒன்றையும் நடித்துக்காட்டினுர்கள்.

# நிலாவரை நீர் யாழ். நகர் வரும்!

(யாழ்ப்பாணம்)

யாழ்நகரின் குடி நீர்ப்பிரச்சனையைத் தீர்க்க நிலாவரை வற்றுத நீருள்ளிருந்து குழாய் மூலம்,நீர் பெறுவதற்கு உடன் நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக யாழ்ப்பாண மாவட்ட அமைச்சர் திரு'யு.பி, விஜயக்கூன் தெரிவித்தார்,

மாவட்ட அமைச்சர் திரு விஜயக்கூன் நிலாவரை வற்றுத நீரூற்றுக் கிணற்றை நேரில் சென்று பார்வையிட்டார்.

ஏற்கனவே சிறுஅளவுபாவிக்கப் படுகின்ற இக் கிணற்றை யாழ்நகருக்கு குழாயின் மூலம் எடுத்து குடிநீர் பிரச்சனைக்கு தீர்வுகாணுமாறு அமைச்சருக்கு தெரிவிக்கப்பட்டது.

இது பற்றி உடனடியாக நடவடிக்கைஎடுப்பதாகஅமைச்சர் உறுதியளித்தார், (கு)

விஸ்வஹிந்து பரிஷத்தினரின்

## பரதநாட்டிய நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

தமிழ் நாட்டைச் சேர்ந்த பிரபலநாட்டிய ஜோதி திருமதி சித்திரா-விஸ்வேஸ்வரனின் பரதநாட்டிய நிகழ்ச்சிகள் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் நடைபெறவிருக்கிறது.

இந் நாட்டியநிகழ்ச்சிவிஸ்வஹிந்து பரிஷத் என்றழைக்கப்படும் அகில உலக இந்து மகாசபையின் [illegible] யின் ஆதரவுடன் நடைபெறவுள்ளது. (நா)

(5ம் கலத் தொடர்ச்சி)

யளிக்கும்.

கொழும்பில் போல் இங்கும் ரப்பர், கல், தார் போன்றவற்றைக் கலந்து புதிதாக கட்டம் கட்டமாக வீதிகள் அமைக்கமுடியாதா?

சீனவுக்கும் சிங்கப்பூருக்கும் சென்றுள்ள மேயர் வந்த பின்பு முன்னேற்றம் ஏற்படாமலா இருக்கப்போகிறது? பொறுத்துப் பார்ப்போமே.

**ஊர்சுற்றி.**

## நாடும் நடப்பும்

வட்டாரத்தில் குறைகள் இருந்தால் வட்டார அங்கத்தவரிடம் எடுத்துச் சொல்லி அல்லது அவரை வற்புறுத்தி நிவர்த்திகாணக்கூடியவாய்ப்பு முன்னர் இருந்தது.

விகிதாசார அடிப்படையில் யாழ்ப்பாண மாநகரசபைக்கு சமீபத்தில் தேர்தல் நடந்தபோது வேட்பாளர்கள் தத்தமக்கெனச் சில வட்டாரங்களைத் தெரிவுசெய்து வாக்குத் தேடினுர்கள். தேர்தல் முடிந்தபின் வெற்றி சரி தோல்வியடைந்த வேட்பாளர்களையும் சரி பெற்ற வேட்பாளர்களையும் சரி அந்த வட்டாரங்களில் காணமுடியவில்லை. தோல்வியடைந்த வேட்பாளர்கள் வரவேண்டிய அவசியமில்லை. வெற்றிபெற்ற வேட்பாளர்கள் எங்கே?

யாழ்ப்பாணத்தில் மழை பெய்து ஓய்ந்திருக்கிறது. இப்போது வீதிகளும் ஒழுங்கைகளும் குண்டும் குழியுமாகவும் எங்கும் கல்லும் மண்ணுமாகவே காட்சியளிக்கின்றன. வீதிகளில் தார் என்பதன் நாமத்தையே காணமுடியவில்லை.

கொழும்பு நகரில் மேம்பாலங்கள் அமைக்கப்படுவதால் பாதசாரிகள் தான் மூட்டை முடிச்சுக்களுடன் படிகளில் ஏறி இறங்கவேண்டியிருக்கிறது. வாகனங்களில் செல்வோர் கஷ்டமின்றி வீதிகளில் இன்னும் வேகமாகச் செல்லமுடியுமென்று முன்பொரு தடவை குறிப்பிட்டிருந்தேன்.

யாழ் நகரில் இன்று வீதிகளின் அவலநிலையையும் வாகனங்களின் தொகையையும் பார்க்கும்போது யாழ்ப்பாணத்தில்தான் மேம்பாலங்கள் அதிக அளவில் அமைக்கப்படவேண்டியது அவசியம் போல் தோன்றுகிறது.

யாழ்ப்பாண நகர வீதிகள் மோசமாக இருக்கிறது என்றால் மாநகரசபை எல்லா வீதிகளுக்கும் பொறுப்பல்ல, நெடுஞ்சாலை அமைச்சுக்குப் பொறுப்பான வீதிகளும் பல இருக்கின்றன என்று பதில் வருகிறது.

எந்த வீதி எந்தச் சபைக்குப் பொறுப்பு, எந்த வீதி எந்த அமைச்சுக்குப் பொறுப்பு என்பதைப் பற்றிப் பொது மக்களுக்குக் கவலையில்லை. பள்ளம் திட்டியில் விழுந்து எழும்பாமலும் வீதியில் செல்லும் வாகனங்கள் பள்ளத்தில் விழுந்து பாதசாரிகள் மீது மோதாமலும் இருக்க வேண்டுமென்பதே பொதுமக்களின் அக்கறை!

யாழ் நகரில் வீதிகள் செப்பனிடப்படுவது வேடிக்கையானது. வீதிகளைத் திருத்துவதற்காக கற்கள் கொண்டு வந்து பறிக்கப்படும். பல மாதங்கள் அவை அங்கேயே கிடக்கும். பின்னர் மணல் கொண்டுவந்து பறிக்கப்படும். அதன்பின் திடீரென்று சில தார்ப் பீப்பாக்கள் வந்து சேரும், வீதியில் சில பகுதிகளில் ஏதோ சில இடங்களில் கொத்துவார்கள். அடுத்து வீதியின் முக்கால் பகுதிக்கும் கற்கள் பரவப்படும். ரோலர் வந்து சிலநாட்கள் அங்கு மிங்கும் நசுக்கும். பின்னர் தோசைக்கல்லில் எண்ணெய் பூசுவதுபோல் தார் பூசப்படும். இதற்கிடையில் இந்த வீதியில் பறிக்கப்பட்ட கற்களில் ஒருபகுதியும் தார்ப் பீப்பாக்களில் ஒருபகுதியும் வேறு பகுதிக்குப் போய்விடும். பூசிய தாருக்கு மேலாக, மண் போடப்படும். வீதி செப்பனிட்டாயிற்று!

அடுத்து ஒரு மழைபெய்கிறது. 'இருந்த வெள்ளத்தை வந்த வெள்ளம் கொண்டு போனது' என்ற பழமொழிக்கொப்ப புதிதாகப் போட்ட கற்களுடன் முன்னர் இருந்த கற்களும் கிளம்பி மேலும் பள்ளமும் மேடுமாகக் காட்சி

(4ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் ஒரு சமாதான தூதுவன் - மாவட்ட அமைச்சர்

(யாழ்ப்பாணம்)

''நாம் அன்போடும் கருணையோடும் எமது பிரச்னைகளை அணுகுகின்றபோது எம்மிடத்தில் வேற்றுமை எதுவும் இருக்காது. தலைவர் ஜே. ஆரினால் அனுப்பப்பட்ட சமாதான தூதுவன் நான்''.

சிறுப்பிட்டியில் பாடசாலைக் கட்டிடம் ஒன்றைத் திறந்து வைத்துப் பேசிய யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யூ. பி. விஜயக்கோன் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. விஜயக்கோன் மேலும் கூறியதாவது:

''தமிழ் மக்கள் எனக்கு அளிக்கின்ற ஊக்கத்தையும் ஒத்துழைப்பையும் பார்க்கின்றபோது உண்மையில் எம்மிடத்தில் எந்தப் பிரச்னையும் இல்லையென்றே எனக்குத் தோன்றுகிறது. மொழியினால் மாத்திரம் நாங்கள் பிரிக்கப்பட்டுள்ளோமே தவிர எமது எண்ணங்கள் செய்கையில் சிங்களவர், தமிழர் என்ற வேறுபாடில்லை. எமது தலைவர் ஜே. ஆரின் ஆட்சி பாகுபாட்டற்ற முறையில் நடக்கிறது'' என்றார். (க)

# மட்டுநகர் நாடகவிழா நாளை ஆரம்பமாகும்

(மட்டக்களப்பு)

இலங்கை கலாச்சாரப் பேரவை பிராந்திய ரீதியில் நடத்தும் நாடகவிழா பிரமாண்டமான முறையில் நாளையும் மறுநாளும் நடைபெறுகின்றது.

பிரதேச ரீதியில் நடைபெறும் இந் நாடக விழா கிழக்குப் பிராந்தியத்தில் முதல் தடவையாக நடைபெறுகின்றது. இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை தமிழ் நாடக ஆலோசனைக் குழுத் தலைவர் கலாநிதி ஆ. கந்தையா உட்பட உறுப்பினர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

மட்டக்களப்பு மாநகரசபை மண்டபத்தில் நடைபெறும் இவ்விழாவில் நான்கு நாடகங்கள் மேடையேற்றப்படுகின்றன. தினமும் இரு நாடகங்கள் நடைபெறும்.

இவ்விழாவில் பிரதம விருந்தினர்களாக மட்டுநகர் முதல்வரும், பிராந்திய அபிவிருத்தி அமைச்சருமான திரு. செல்லையா இராசதுரை, நீதிமந்திரி திரு, கே, டபிள்யு. தேவநாயகம் ஆகியோர் கலந்து கொள்கின்றார்கள். (கு)



## ஜீவனும் சாகுமா?

ஜீவாத்மா பரமாத்மாவைச் சேர்ந்துவிட்டது. அதுதானே அன்று மழை 'கொட்டு, கொட்டெ'ன்று கொட்டியது. அடிச்சுவட்டையே வெள்ளம் அள்ளிக்கொண்டு போய் விட்டது. பாதச்சரடு பதிந்த இடமெல்லாம் பார்வைக்குத் தெரியாமல் பண்ணிவிட்டது. நல்லவர்கள் போன பாதையின் கதி அதுதானும். திரும்பாத ஊருக்குப் போய்விட்டாயாம். ஜீவன்! மின்னாமல், முழங்காமல், முன்னெச்சரிக்கை எதுவுமில்லாமல் ''வானத்தமரன்போல் வந்தான் காண், வந்ததுபோல் போனான்காண்'' என்று கதையை முடித்துக்கொண்டு விட்டாயே!

அடக்கம், பணிவு, மென்மையான பேச்சு, அமைதியான - கலகலப்பான நகைச்சுவை, எளிய கம்பீரமான உடை, தானுண்டு தன் கருமமுண்டு என்று ஒதுங்கிப் போகும் பெருந்தன்மை, பிறர்க்கிரங்கும் மனம், வன்சொல்லறியா-நா உன்னைக் கண்டாலே உள்ளம் கிளுகிளுக்குமே, இன்னே! நினைத்தாலே சிலிர்க்க வைத்துவிட்டாயே!

சிலநாள் பழக்கத்தில் பல்கலைக்கழகத்தில் பலபேர் பரிவைப் பெற்றுக்கொண்டாய். ஆனால் அவர்களையெல்லாம் ஏமாற்றிவிட்டாயே! பத்து மாதம் சுமந்து பெற்றவளை மறந்தாய், பல்லாண்டுகாலம் உறவாடியவர்களைத் துறந்தாய், சிலநாள் கொண்டாட்டம் பெரிதா என நினைத்துவிட்டாயா?

டாக்டர் கந்தையாவின் மகன், குறைவில்லான், சிறப்புமிக்கான். சிலநாள் சீரிய ஆசிரியபணி புரிந்தான், மேற்படிப்பு வாய்ப்புப்பெற்றான் - உலகம் கொண்டாடியது, திருஷ்டிபட்டுவிட்டதோ? போய்விட்டாயே ஜீவானந்தன். கவலைக் கடலில் மூழ்கி துயர இருட்டில் துழாவுகிறவர்கள் நாம்; மீண்டும் சந்திக்காமலா போவோம்!

- 'தேவுஅத்தான்'

## பொலிஸ் நிலையமாக மாறும்

(வவுணதீவு)

வவுணதீவில் நிர்மாணிக்கப்பட்டு வரும் கைத்தொழில் மண்டபம் பொலிஸ்நிலையமாக மாற்றப்படும். இதற்கான விசேட நிதியை பிராந்திய அபிவிருத்தி அமைச்சு ஒதுக்கியுள்ளது. (வெ-த)

……

## தென்னங்கன்று விநியோகம்

(புலோலி)

வடமராட்சிப் பகுதியில் தென்னை வளர்ப்பை அபிவிருத்தியடையச் செய்யுமுகமாக இப்பகுதி மக்களுக்கு சிறந்த நல்லின தென்னங்கன்றுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்னம் மேற்கொண்டுள்ளார். ( )

……

## மட்பாண்ட நிலையம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புத் தொகுதியில் பன்குடாவெளி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள மட்பாண்ட நிலையம் மாசிமாதம் பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திரு. செல்லையா இராசதுரையினால் ஆரம்பித்துவைக்கப்படும். ( )

……

## சிறப்பாக நடைபெற்றது

(யாழ்ப்பாணம்)

கீழ்கரவை ஞானவைரவர் ஆலயத்தில் இம்முறை திருவெம்பாவைப் பூஜைகள் 10 நாட்களும் விமரிசையாக நடைபெற்றன. இரவுக்கால நிகழ்ச்சிகளாக இன்னிசைக்கச்சேரிகள் நடைபெற்றன. கீழ்கரவை பரிபாலசிங்கம் சிவேசன், கருணாகரன் ஆகியோர் இன்னிசைவிருந்தளித்தனர். [கொ]

## புதிய ஸ்ரீ தொடரிலக்கம்

(கொழும்பு)

புதிய வாகனங்களுக்கு தற்போது 11சிறி இலக்கங்கள் வழங்கப்படுகின்றன. கடந்த புதன்கிழமையுடன் 10 சிறி இலக்கத்தொடர் முடிவடைந்தது.

10 சிறிஇலக்கங்களைப்பெற்ற வாகனங்களில் 70 வீதமானவை மோட்டார் சைக்கிள்களும், ஸ்கூட்டர்களுமே என்று போக்குவரத்துத் திணைக்கள அதிகாரி தெரிவித்தார், இதனால் தற்போது அவற்றுக்கு 80சிறி தொடர்இலக்கம் வழங்கப்படுகின்றது என்றும் அவர் கூறினார். [கு]

……

## நினைவாஞ்சலி

### செல்லையா முதலியார் தர்மலிங்கம்

இளைப்பாறிய மாவட்ட நீதிபதியான அமரர் செல்லையா முதலியார் தர்மலிங்கம் முல்லைத்தீவிலுள்ள உயர் குலமும் சைவ ஒழுக்கமும் தெய்வ பக்தியுமுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர். பிரபலமான வற்றாப்பளை அம்மன்கோயில் தர்மகர்த்தாக்களாயுள்ளவர்கள் இவருடைய நெருங்கிய இனத்தவர்களே.

இவர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கல்விகற்று, லண்டன் 'மற்றிக்குலேஷன்' சோதனையில் சித்தியடைந்தவர் இவருடைய இளம்வயதில் ஆங்கிலேயரே இந்த நாட்டை ஆட்சி செய்தனர். அந்தக் காலத்தில் அரசாங்க உத்தியோகத்தை அநேகர் நாடினர்கள். ஏனெனில் அரசாங்க உத்தியோகத்துக்கு இளைப்பாறும் பொழுது உபகாரச் சம்பளமும் அவருக்குப்பின் மனைவி மக்களுக்கு ஊதியமுமுண்டு. ஆனால் அமரர் தர்மலிங்கமோ அரசாங்க உத்தியோகத்தை வெறுத்தார். சட்டக்கல்லூரியில் சேர்ந்து வழக்கறிஞருக்குரிய சோதனைகள் மூன்றிலும் மேன்மையுடன் சித்தியடைந்தார்.

இவர் மாவட்ட நீதிபதியாக இரத்தினபுரி, கம்பஹா, பருத்தித்துறை, ஆகிய இடங்களில் கடமையாற்றினர். அமரர் தர்மலிங்கத்தின் சட்டத்தின் நுண்ணிய அறிவும், சட்டத்தரணிமாருடன் அன்புடன் பழகும் விதமும், பாரபட்சமற்ற தீர்ப்பும் எல்லோரையும் கவர்ந்து வழக்கில் தோற்றவர்கள் கூட திருப்தியுடன் நீதிமன்றத்தைவிட்டு அகன்றனர். அமரர் தர்மலிங்கம் புதிதாகச்சேர்ந்த சட்டத்தரணிகளுக்கும், மற்றவர்களுக்கும் அதிகம் உதவி புரிந்தவர். ''அறிவு கொடுத்தாலும் குறையாது', வெள்ளத்தால் அழியாது, வெந்தணலால் வேகாது, கள்ளர்க்கோ மிகஅரிது காவலுமோ மிக எளிது'' என்னும் ஔவைப் பிராட்டியாரின்போதனை ப் பின்பற்றியவர்.

தருமத்துக்கென்று வருபவர்களுக்கு உதவிபுரியாமல் விடமாட்டார். சாந்தம், பொறுமை தயவுடமை, அன்புடைமை, வாய்ந்த இவர் தன்னுடைய சீவியத்தைச் செவ்வனே நடத்தினர். மரணத்தைத் தவிர்க்க மாணிடர் ஒருவராலும் முடியாது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக.

சி. தில்லையர்
தெல்லிப்பளை

……

## விவசாய அறிவுப் போட்டி

(வேலணை)

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனமும் விவசாயப் பகுதியினரும் கூட்டாக இணைந்து நடாத்தும்வானொலி விவசாய அறிவுப்போட்டி இம் மாதம் 19ம் திகதி குழிபாய் விக்ரோறியாக் கல்லூரியில் நடைபெறவிருக்கின்றது.

இப்போட்டி யாழ். மாவட்டத்தில் [illegible] பட்ட இளம் விவசாயிக்குத [illegible] அங்க [illegible] த்தவர்களுக்கிடையே நடாத்தப்படவுள்ளது. (கு)



செல்வி ஆன் சிசிலியா றெஜே மணியின் பரத நாட்டிய அரங்கேற்றம் இன்று மாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறுகிறது. பேரருட் திரு. கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை பிரதம அதிதியாகக் கலந்துகொள்கிறார். கபிரியேற்பிள்ளை (பொலிஸ் சார்ஜன்ட், யாழ் பொலிஸ்) தம்பதிகளின் புதல்வியான இவர், மானிப்பாய் நாட்டியாலய விஞேதினி அரசரத்தினத்தின் சிஷ்யை ஆகும்.

# பரீத் நஸீரீன் புதிய சாதனை முயற்சி

(யாழ்ப்பாணம்)

ஜனப் பரீத் நஸீரின் மற்றுமொரு சாதனை முயற்சி இம் மாதம் 9-ம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

ஜனப் பரீத் நஸீர் 9-ம் திகதி மாலை கொழும்பு காலிமுகத்திடலிலிருந்து யாழ்ப்பாணம் வரை சைக்கிளில் இருந்து பின்நோக்கி ஓடவுள்ளார், 10-ம் திகதி மாலை இவர் யாழ்ப்பாணம் வந்து சேருவார்.

இச் சைக்கிளோட்டம் யாழ். மாநகரசபை பொழுது போக்குச் சங்கத்தின் ஆதரவில் நடைபெறவுள்ளது. இச் சைக்கிள் ஓட்டம் டாக்டர் பிலிப் தலைமையில் நடைபெறும். (கொ)

# 'யாழ். நகரில் சிங்களவர்வாழ முடியாது என்பது தவறு' -- கடற்றொழில் அமைச்சர்

[வென்னப்புவ]

''யாழ்ப்பாண மக்கள் பண்பாட்டிலும், விருந்தோம்பலிலும் தலை சிறந்தவர்கள். சிங்களமக்கள் யாழ்ப்பாணத்திற்கு செல்லவேண்டும். அங்குள்ள தமிழ்மக்கள் உங்களுடன் அன்பாகவும், சகோதரத்துவ மனப்பான்மையுடனும் பழகுவார்கள்''

தமிழ்:சிங்கள நல்லுறவை வளர்க்குமுகமாக வடபகுதியில் இருந்து வென்னப்புவவிற்கு சென்ற நல்லெண்ணத் தூதுகோஷ்டியினரைக் கௌரவிக்குமுகமாக வென்னப்புவ சென் யோசுவாஸ் கல்லூரியில் நடைபெற்ற கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றிய கடற்றொழில் அமைச்சர் திரு. பெஸ்ரஸ்பெரேரா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் குறிப்பிட்டதாவது:

''சிலர் யாழ்ப்பாணப் பகுதியில் சிங்கள மக்களும், தென் பகுதியில் தமிழ் மக்களும் சென்று வாழமுடியாத நிலை இருப்பதாக பொய்ப்பிரசாரம் செய்து வருகின்றனர். ஆனால் இப்பிரசாரம் பொய்யானது என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டது.

''தமிழ் - சிங்கள மக்களுக்கு இடையே உள்ள நல்லுறவு இப்போதிருப்பதுபோன்று நீடிக்கும்போது அரசாங்கத்தின் விருப்பமும் நிறைவேறி நமது நாடும் அபிவிருத்தியடையும் என்பதில் சந்தேகமில்லை''

……

## பாராட்டுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை கிழக்கு சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயபரிபாலன சபையினரின் கூட்டம் தலைவர் திரு. கா. யோகசாமி தலைமையில் நடைபெற்றது.

சிவதர்மவள்ளல் திரு. க. கனகராசா ஆலயத்திற்கு புதிய எலிவாகனத்தை அன்பளிப்புச் செய்தமையைப் பாராட்டுமுகமாக இக்கூட்டம் நடைபெற்றது. ( )

……

## குழந்தைகளுக்கு பால்மா

(புலோலி)

[illegible]சப்பியன்பற்றுகிராமாட்சி மன்ற எல்லைக்குள் உள்ள ஒரு வயதிற்குட்பட்ட எல்லாக்குழந்தைகளுக்கு இலவச பால்மா விநியோகம் செய்யப்படவுள்ளது.

[illegible]ற்கான நடவடிக்கைகளை [illegible] ஆணையாளர் திரு. [illegible]. வேலும்மயிலும் மேற்கொண்டுள்ளார். ( )

## யாழ்நகரமண்டபம்

[யாழ்ப்பாணம்]

யாழ். நகர மண்டபத்தில் உள்ள சினிமாமண்டபம் திறக்கப்பட்டுள்ளது.

ஜனவரி 1-ம் திகதி முதல் நகரமண்டபம் பொது மக்கள் பாவனைக்கு வந்துள்ளது. ( )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுனெஸ்கோ - இலங்கை கலாச்சார முக்கோணத் திட்டம்

அனுராதபுரம்-கி.மு. 4ம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 10ம் நூற்றாண்டுவரை புராதன இலங்கையின் தலைநகராக விளங்கிய நகரம்.

அக்காலங்களில் நாகரிகமேம்பாடுற்று விளங்கிய எகிப்து, மெசபொத்தேமியா, கிரேக்கம், ரோம், சீனம், இந்தியா ஆகியதேசங்களைப் போன்றே ஆச்சரியத்தை ஏற்படுத்தும் விதத்தில் இலங்கையும்விளங்கியிருப்பதை வெளிப்படுத்தும் வரலாற்றுஞாபக சின்னங்கள் பல இன்னமும் இங்கேகாணப்படுகின்றன.

புராதன உலகின் கடைசிக் காலகட்டமாகிய கி. பி. 4ம் நூற்றாண்டில், உலகின்மிக உயரமான கட்டடங்களில் 4, 5, 6-வது உயரமான கட்டடங்கள் இலங்கையில் இருந்திருக்கின்றன.

எகிப்தின் பிரமிட்டை விட 83 அடி மட்டுமே உயரத்தில் குறைவானதாக, ஜேத்தவனராம தாதுகோபுரம் 400 அடி உயரத்தைக்கொண்டிருந்திருக்கிறது. அபயகிரிகோபுரம் 390 அடி உயரத்தையும், ருவான்வெலிசபா 300 அடி உயரத்தையும் கொண்டிருந்தன.

அனுராதபுரம் புகையிரத நிலையத்துக்கு அண்மித்ததாக புகையிரதப்பாதையின் மேலைப்புறத்தில் இக்கோபுரங்கள் புகையிரதத்தில் நாம்செல்லும் போது தெரிகின்றன.

துட்டகைமுனுவால் கட்டப்பட்ட ருவான்வெலிசபா வெண்ணிறத்தூபி சிதைவு எதுவுமின்றி காட்சிதருகிறது. மற்றைய இரு கோபுரங்களும் சிதைவுகளுடன் காணப்படுகின்றன.

சிதைவுற்றிருக்கும் இந்த ஜேத்தவனராம, அபயகிரி தாதுகோபுரங்களுடன், பொலனறுவையிலுள்ள 12ம் நூற்றாண்டுப் பல்கலைக்கழகமான அலஹன பிரிவேன, சிகிரியா பூங்கா, தம்புள்ளயிலுள்ள பௌத்தகுகை, கண்டி தலதா மாளிகை ஆகிய இவற்றையும் உள்ளடக்கி, அனுராதபுரம், பொலனறுவை, கண்டி ஆகிய இலங்கையின் புராதன தலைநகரங்கள் மூன்றுக்கும் இடைப்பட்ட முக்கோணப் பிரதேசத்தில் 'கலாச்சார முக்கோணத் திட்டம்' என்ற பெயரில், இப்பிரதேசங்களுக்கு உட்பட்ட பகுதிகளிலுள்ள புராதன சின்னங்களைப் புதுப்பிக்கும் திட்டமொன்றை ''யுனெஸ்கோ'' நிறுவனத்துடன் இலங்கை மேற்கொண்டிருக்கிறது.

மனித தத்துவத்தின் - பண்பாட்டின் கலாச்சார சின்னங்களைப் பேணும் இந்த யுனெஸ்கோ-இலங்கை திட்டம், உலகநாடுகள் பலவற்றுடனான யுனெஸ்கோவின் இத்தகைய கலாச்சாரபேணல் திட்டங்களின் வரிசையில்இருபதாவது திட்டமாகும்.

இந்த யுனெஸ்கோ - இலங்கை அபிவிருத்தித்திட்டத்தின் தொடக்க வைபவமாகத்தான் உலகிலேயே மிகப்பெரியதான அனுராதபுரத்தின் ஜேத்தவனராம தாதுகோபுர புனரமைப்புப்பணி ஆரம்ப வைபவம் அமைந்தது.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவும், பிரதமர் திரு. ஆர். பிரேமதாசாவும் அத்தாதுகோபுரத்தின் மேலைப் பகுதியில் சற்சதுர வடிவில் துளையிடப்பட்ட ஓரிடத்தில் கல்ஒன்றை நாட்டி, சுபவேளையில்-ஒரு மாபெரும் கலாச்சார வைபவமாக அப்பணியினை ஆரம்பித்துவைத்தார்கள்.

பெருமையும், வியப்பும் கொள்ளவைக்கும் வரலாற்றுச் சின்னங்கள் மலிந்துகாணப்படுகின்ற-புனித பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இப்பகுதியில் நீரோடைகளும் பொய்கைகளுமாக ரம்மியமான இயற்கை வனப்புகளுடனுமமைந்த அப்பகுதியின் கீழைப்புறத்தில்-ருவான்வெலிசயாவிலிருந்து சிலயார்கள் இப்பால் மிகப்பாரிய பிரதேசத்தை உள்ளடக்கி - பிரமிப்பையே நிறைத்து பிரமாண்டமான இந்த ஜேத்தவனராம காணப்படுகிறது. விகாரையின் மேலைப்புறத்தில் சயன நிலையிலுள்ள புத்தரின் உருவச் சிலையும், மற்றும் பரிவாரங்களின் சிலைக்காட்சிகளும் பழைமையான வண்ணங்களுடன் இன்னமும் அழகாகக் காட்சிதருகின்றன. புத்தரின் புனித சின்னங்கள் சில அங்கு கண்ணாடிப் பேழையொன்றில் வைக்கப்பட்டிருக்கின்றன.

400 அடி உயரமான இத்தாது சோபுரம் கி. பி. 4-ம் நூற்றாண்டில் அதாவது, 1600 வருடங்களின் முன்னர் மகாசேன மன்னனால் கட்டப்பட்டது.

யுனெஸ்கோ - இலங்கைத் திட்டத்தின்கீழ் புதுப்பிக்கப் படவுள்ள அனுராதபுரத்தின் மற்றைய தாது கோபுரமான அபயகிரி (உலகின் இரண்டாவது மிகப்பெரிய தாதுகோபுரம் 390 அடி உயரம்) கி. மு. 2-ம் நூற்றாண்டில் வத்தகாமினி அபயவால் கட்டப்பட்டது.

### 'மாலி'

தம்புள்ள கற்குகை கி. மு. 3-ம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டதெனினும் தற்போது காணப்படும் ஓவியங்கள் கி. பி 18-ம் நூற்றாண்டில் கீர்த்தி சிறி ராஜசிங்கனால் புதுப்பிக்கப்பட்டவையாகும். இதுவும் உலக பௌத்த ஆலயங்களில் காணப்படும் ஓவியங்களுள் மிகக்கூடிய பரப்பளவினதாகும்.

சிகிரியாபூங்கா கி. பி. 5-ம் நூற்றாண்டில் கசப்பா மன்னனால் அமைக்கப்பட்டது.

புத்தரின் புனித தந்தமுள்ள இடமான கண்டி தலதா மாளிகை கி. பி. 4-ம் நூற்றாண்டிலிருந்து பேணப்பட்டு வருகிறது. இதைச்சூழவுள்ள பிரதேசத்தையும் ஏற்ற விதத்தில் புனர்நிர்மாணஞ்செய்தலும் இத்திட்டத்தின்கீழ் அமைகிறது.

ஆக, ஜனாதிபதி தனது உரையில் குறிப்பிட்டது போல் உண்மையில் இவை அனைத்துமே இந்நாட்டு முன்னோர்களின் மத, பொருளாதார, இயந்திரவியல் சாதனைகளே தான்!

நவீன காலத்துக்கே சவாலாக அமைபவை இவை!

200 ஆண்டு காலத்தினதான அமெரிக்காவினதும், நூற்றாண்டினதான ஜப்பானினதும் முன்னேற்றத்தைப் பற்றி நாம் பேசிக்கொண்டிருக்கும்போது, வியத்தகு இவ் வரலாற்றுச் சின்னங்கள் நிச்சயமாகப் பேணப்படவேண்டியவையே. இவை சமுதாயங்களின் வளர்ச்சிக்கு பல விதங்களில் மிக இன்றியமையாதன.

ஜேத்தவனராம, அபயகிரி தாதுகோபுரங்கள் 12-ம் நூற்றாண்டு காலப்பகுதியிலும் ஒரு தடவை புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன.

அவ்வாறே, ஜனாதிபதி ஜயவர்த்தன காலமும் இப்பணி மூலம் சரித்திரமுக்கியத்துவமேபெறும்.

உண்மையில் இத்தகைய பணிகளில் இன, மத, மொழி பேதங்கள் பேணப்பட முடியாது. பிரதமர் திரு. பிரேமதாச அவ்வைபவத்தில் புனரமைப்புப்பணிகளுக்கான நிதி உதவி பற்றிக் குறிப்பிடுகையில் இலங்கையில் வாழும் பௌத்த - சிங்களவர்களுக்காகத் திரமன்றி, மொத்த சனத்தொகையினரான ஒரு கோடி 40 லட்சம் மக்களுக்குமாகவே 'கணக்குப் போட்டார்.''

அதில் தவறிருக்க முடியாது. இத்தகைய முயற்சிகளில் பேதங்களிருக்க முடியாது.

நூற்றுக்கணக்கானபௌத்த குருமார்கள், நூற்றுக்கணக்கான சிங்கள இசை-நடன கலைஞர்கள், பல்லாயிரக்கணக்கான பௌத்தர்கள் கலந்துகொண்டு பௌத்த ஆசார-கலாச்சார பின்னணியில் அந்த தொடக்க வைபவம் நடைபெற்றாலும் அதைப் பார்த்த போது, அங்கிருந்த ஏனைய மதத்தவர்களுக்குங்கூட மனதில் மகிழ்ச்சியைத்தான் அது அளித்துக்கொண்டிருந்தது. இவற்றில் காழ்ப்புணர்வுக்கு இடமில்லை.

மனம் புளகாங்கிதமடைந்திருந்த அந்தச் சமயத்தில் என்னுடைய மனதில் இன்னொரு நினைவும் அலைமோதிக்கொண்டிருந்தது.

## புராதன தலைநகரில்

## கால்கோள் வைபவம்

ஆனால் அது காழ்ப்புணர்வினதோ- இன-மத வாதத்தின்பாற்பட்டதோ அல்ல. அப்படியாக அது புரிந்து கொள்ளப்படவும் கூடாதது.

வரவு - செலவுத் திட்டத்தின் கலாச்சார அமைச்சின் மான்யம் மீதான குழுநிலை விவாதத்தை ஆரம்பித்து மானிப்பாய் உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரைதான் என் நினைவில் அவ்வேளை எழுந்துகொண்டிருந்தது.

அனுபவம் வாய்ந்த ஒரு சிரேஷ்ட அரசியல் வாதியும், சோஷலிச கொள்கைகளில் ஈடுபாடுடையவருமான திரு. தர்மலிங்கம் குறுகிய ஓர் அரசியல் கண்ணோட்டத்தில் இனவாத உணர்வோடு அப்பேச்சைப் பேசினர் என்று அதற்குஅர்த்தம் கற்பித்துவிட முடியாது.

''தமிழ்மக்களின் கலாச்சார வரலாற்றுப் பின்னணிதொடர்பாக இந்நாட்டின் தொல்பொருள் ஆய்வுத் திணைக்களம் பாகுபாடற்ற முறையில் நீதியாக செயல்படவில்லை என்பதைத் கவலையுடன் கூறநேர்கிறது என்று பகிரங்கமாகவே குற்றஞ் சுமத்தினர் அவர்.

''நீங்கள் ஏன் அப்படிக்கூறுகிறீர்கள்?'' என்று கலாச்சார அலுவல்கள் அமைச்சர் திரு. ஹருள்ளே குறுக்கிட்டுக் கேட்டபோது ''தயவுசெய்து சற்றுப் பொறுங்கள்; என்னுடைய பேச்சின் சாரம் உங்கள் கேள்விக்கான பதிலாகவே இருக்கும்'' என்றுகூறி திரு. தர்மலிங்கம் தமிழ்ப்பிரதேசத்தில் காணப்பட்ட பல்வேறு அகழ்வுச் சின்னங்கள் பற்றியும், தொல்பொருள் ஆய்வுத் திணைக்களம் அவை தொடர்பாக மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றியும் சம்பவங்களைக் குறிப்பிட்டு மிக முக்கியத்துவம்வாய்ந்த உரையை ஆற்றினர்.

தமிழரின் கலாச்சார சின்னங்கள் காணப்பட்டால் அவ்விடங்களில் திணைக்களம் தனது ஆராய்ச்சிகளை நிறுத்திவிடுகிறது என்று பல உதாரணங்களைக் கூறிய அவர், திருகோணமலையில் சுவாமிமலையின் அருகே கடலுக்கடியில் ஆராய்ச்சி நடத்திய ஆதர்கிளார்க்கும், மைக்வில்சனும் கண்டுபிடித்த சைவ ஆலயம்பற்றி திணைக்களம் எவ்வித அக்கறையும் மேற்கொள்ளவில்லை என்றார்.

1974-ல் கந்தரோடை கிராமத்தில் ஆராய்ச்சி நடத்திய திணைக்களம்; 2 அடி ஆழத்தில் - நிலத்துக்கடியில் சில வட்டவடிவ அமைப்புக்களைக் கண்டதும், ஆராய்ச்சியை அத்துடன் நிறுத்திவிட்டு அவற்றின் மீது டகோபாக்களைக் கட்ட ஆரம்பித்துவிட்டது'' என்றும் கூறிய அவர் ''2100 ஆண்டுகள் புராதனம்மிக்க ஓர் இடத்தின் சாசனங்களை 2 அடி அகழ்வில் ஆய்ந்துவிடமுடியாது'' என்றும் அடித்துக் கூறினர்.

அத்துடன், அப் பகுதிக்கு சில வருடங்களின் முன் விஜயஞ்செய்த பென்சில்வேனியா பல்கலைக்கழக புதைபொருள் ஆராய்ச்சி நிபுணர் குழு, அங்கு முறையானவிதத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு மேலும் ஆழமாக அகழ்வுகளை மேற்கொண்டால் கந்தரோடையில் ஒரு திராவிட நாகரிகத்தைக் காணலாம் என்று தங்கள் அறிக்கையில் வெளியிட்டிருக்கிறார்கள் என்றும் திரு. தர்மலிங்கம் குறிப்பிட்டார்.

2000, 2100 வருடங்களின் முன்னர் இலங்கையில் தமிழர்கள் பௌத்தர்களாகவே இருந்தார்களென்பதும் திரு. தர்மலிங்கம் வலியுறுத்திய மற்றென்று!

பௌத்தரின் சின்னங்கள் பல இந்துக்களின் சின்னங்களாக இருக்கின்றன என்றும் அவர் கூறினர்.

அவர் கூறியபடி, தொல்பொருள் ஆய்வுத்திணைக்களம் சில சிங்கள தீவிரவாத சக்திகளுக்கு உட்பட்டிருக்கிறதோ என்னவோ, திரு. தர்மலிங்கம் தெரிவித்த விடயங்கள் குறித்து பொறுப்புவாய்ந்த-அதுவும் இத்தகைய போற்றத்தகுந்த பணிகளில் ஈடுபட்டுள்ள - ஒரு தார்மீக சமுதாயத்தை கட்டியெழுப்ப முயலும் அரசு கவனம்செலுத்த வேண்டியது அவசியமானதாகவே இருக்கும்.

இது பல பிரச்னைகளின் தீர்வுக்கும் வழிவகுக்கலாம் என்று கூறினால் இந்த நினைவுகளில் என்ன தவறிருக்கிறது?

## எம். ஜி. ஆர். நடித்த படங்கள்

(மட்டக்களப்பு)

எம். ஜி. இராமச்சந்திரன் நடித்த தரமான படங்களை இந்தியாவில் இருந்து விரைவில் இறக்குமதி செய்து திரையிடுங்கள் என்று மட்டுநகர் இதயக்கனி எம். ஜி. ஆர். ரசிகர் மன்றம் இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனத்திடமும், பிராந்திய அபிவிருத்தி அமைச்சரும் மட்டுநகர் முதல்வருமான திரு. செல்லையா இராசதுரையிடமும் கோரிக்கை விடுத்துள்ளது. (கு)

......

## வான் விபத்து பொலிசார் வேட்டை

(மாவிட்டபுரம்)

வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்றவரை மோதிவிட்டுத் தப்பியோடியதாகக் கூறப்படும் வான் ஒன்றை காங்கேசன்துறைப் பொலிசார் தேடிவருகின்றனர்.

மயிலிட்டி கிராமசபை வீதியில் எஸ். சுரேந்திரன் என்பவர் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த சமயமே இவ்விபத்து இடம்பெற்றது. விபத்தில் காயமடைந்த நபர் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (கு)

......

## வவனியா எம். பி. பாராட்டு

(வவனியா)

வவனியா பா. உ. திரு. தா. சிவசிதம்பரத்துக்கு வவனியா மாவட்ட கமநலச் சேவை நிலைய ஊழியர் சங்கத் தலைவர் ம. தியாகராசா கமநலச் சேவை நிலைய ஊழியர்கள் சார்பாக பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் குறை நிரப்புப்படி கமநலச் சேவை நிலைய ஊழியர்களுக்கும் வழங்கப்படவேண்டுமெனவும், நிலைய ஊழியர் சார்பாக முன் அறிவித்தல் கொடுத்த கேள்வியொன்றும் பாராளுமன்றத்தில் இடம்பெற்று விவசாய அமைச்சரும், தொழிலமைச்சரும் அது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்ததும் குறிப்பிடத்தக்கது. (கு)

## இடமாற்றம்

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் கிராமசபை எழுதுவினைஞராக கடமையாற்றிய திரு. வி. தங்கவடியவல் கிளிவெட்டி கிராமசபைக்கு பிரதமஎழுதுவினைஞராக பதவி உயர்வுடன் இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார். (கு)

## உதவி ஆசிரியர் நியமனம் 16-ல் வழங்கப்படும்

(மட்டக்களப்பு)

கல்விச்சேவை ஆணைக்குழுவினால் தடை செய்யப்பட்ட தராதரப்பத்திரமற்ற உதவி ஆசிரியர்களின் நியமனம் இம்மாதம் 16-ந் திகதி பாடசாலை ஆரம்பமாகும்போது வழங்கப்படுமா?

பிராந்திய அபிவிருத்தி அமைச்சரான திரு. செல்லையா இராசதுரை, நீதிஅமைச்சர்கே. டபிள்யு. தேவநாயகம் ஆகியோரின் சிபார்சின் பேரில் கடந்த அக்டோபர் மாத நடுப்பகுதியில் இருநூறுக்கு மேற்பட்டோருக்கு மட்டக்களப்பு ல்வித் திணைக்களத்தில் நேர்முகப் பரீட்சை நடைபெற்றது. இந்நேர்முகப் பரீட்சையில் பலரின் விண்ணப்பங்கள் பல காரணங்களால் நிராகரிக்கப்பட்டன. ஏனையோரின் விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டு அவர்களின் சான்றிதழ்கள் கல்வி இலாகாவினால் பெற்றுக்கொள்ளப்பட்டன. ஆனாலும் கல்விச்சேவை ஆணைக்குழுவின் உத்தரவின் பேரில் நியமனம் வழங்கப்படவில்லை.

இந்தநேர்முகப் பரீட்சைக்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்தும் பலர் சமூகமளித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

......

## புதிய நிர்வாகிகள்

(புலோலி)

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் புதிய உத்தியோகத்தர்கள்:- போஷகர்- ந. கிருஷ்ணராசா, தலைவர்- நா. விஜயரட்ணம், உப தலைவர்- மு. சிவகுருநாதன், செயலாளர்- ந. சிவசுப்பிரமணியம், உப செயலாளர்- தி. நகுலராசா, பொருளாளர்- ந. ரவீந்திரன், உப பொருளாளர்- செ. தங்கத்துரை.

நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (கு)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வால்ட்ஹெய்மைக் கொலை செய்ய ஈரானில் சதி!

## வெளிநாட்டினரின் முயற்சி முறியடிப்பு

தெஹ்ரான், ஜன. 3
ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் டாக்டர் குர்த் வால்ட்ஹெய்மைக் கொலைசெய்ய மேற்கொள்ளப்பட்ட சதித்திட்டம் முறியடிக்கப்பட்டுவிட்டதாக ஈரானிய வெளியுறவு அமைச்சர் அறிவித்துள்ளார்.

ஈரானில் வெளிநாட்டினரே இக்கொலை முயற்சியை மேற்கொண்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

ஈரானில் பணயம் வைக்கப்பட்டுள்ள அமெரிக்க அதிகாரிகளை விடுவிப்பது தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடாத்த இங்கு வந்த டாக்டர் வால்ட்ஹெய்ம் கடந்த ஆண்டு ஈரானில் இடம்பெற்ற புரட்சியின் போது அங்கவீனர்களான மக்களை பார்வையிடுவதற்குச் சென்றபோதே அவரைக் கொலைசெய்யத் திட்டமிடப்பட்டதாக வெளியுறவு அமைச்சர் ஜனுப் சாதிக்கொட்ஷாவே தெரிவித்தார்.

### வீதிகளில் ஆர்ப்பாட்டம்

இதேவேளையில் டாக்டர் வால்ட்ஹெய்மை ஈரானை விட்டு வெளியேறவேண்டும் என்று கோரி தெஹ்ரான் வீதிகளில் சுமார் 1500 பேர் ஆர்ப்பாட்டம் நடாத்தினர்.

அமெரிக்கர்களைப் பணயம் வைத்துள்ள மாணவர்களும் வால்ட்ஹெய்மின் விஜயத்தை எதிர்க்குமாறு தொலைக்காட்சியில் தோன்றி கோரிக்கைவிடுத்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து டாக்டர் வால்ட்ஹெய்மின் நடமாட்டமும், பேச்சுவார்த்தை விபரமும் இரகசியமாகவே வைக்கப்பட்டுள்ளது.

### கொலைமுயற்சி பற்றி தெரியாது

தம்மைக் கொலை செய்ய மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுவது பற்றி தமக்கு எதுவும் தெரியாதென்றும் தாம் மேற்கொள்ளவிருந்த சில விஜயங்கள் ரத்துச்செய்யப்பட்டுள்ளதாக மட்டுமே தமக்குத் தெரிவிக்கப்பட்டதாகவும் டாக்டர் வால்ட்ஹெய்ம் தெரிவித்தார். (கு)

## பூமியதிர்ச்சி! 50 பேர் பலி!!

வாஷிங்டன், ஜன. 3
அத்திலாந்திக் சமுத்திரத்திற்கு அருகேயுள்ள அஸ்வீக் தீவில் ஏற்பட்ட பூமியதிர்ச்சியில் 50 பேருக்கும் அதிகமானவர்கள் பலியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் சுமார் 400பேர் பலத்த காயமடைந்ததாகவும் தெரியவருகிறது. (கு)

## 1-1-1980 முதல் 'ஈழநாடு' சந்தா

(தபால்மூலம் விநியோகம்)
தினசரி-வாரமலர் (உட்பட)

3 மாதம் ரூபா 60-00
6 மாதம் ரூபா 120-00
1 வருடம் ரூபா 240-00

வாரமலர் (மட்டும்)

3 மாதம் ரூபா 9-75
6 மாதம் ரூபா 19-50
1 வருடம் ரூபா 39-00

(ஆள்மூலம் விநியோகம்)
(யாழ். மாநகரசபை எல்லைக்குள்)

தினசரி-வாரமலர் (உட்பட)

3 மாதம் ரூபா 47-00
6 மாதம் ரூபா 93-00
1 வருடம் ரூபா 186-00

வாரமலர் (மட்டும்)

3 மாதம் ரூபா 7-75
6 மாதம் ரூபா 15-50
1 வருடம் ரூபா 31-00

### இந்திரா ஆட்சியமைத்தால்

# தேர்தல்நடைபெருது என்று கூறுவதற்கு எம். ஜி. ஆர். யார்?

(சென்னை)
''இந்திரா ஆட்சியமைத்தால் பதினைந்துவருடங்களுக்கு தேர்தலே நடைபெருதென்று கூற எம். ஜி. ஆருக்கு என்ன



தகுதியிருக்கிறது? தமது ஆட்சிக் காலத்தில் பல உள்ளுராட்சி மன்றங்களைக் கலைத்துவிட்டு தேர்தலே நடத்தாமல் இருப்பவரல்லவா அவர்''.

இவ்வாறு தி. மு. க. தலைவரும் தமிழக எதிர்க்கட்சித் தலைவருமான டாக்டர் மு. கருணாநிதி மத்திய சென்னையில் நடைபெற்றகூட்டமொன்றில் பேசுகையில் கூறினார். அவர் தொடர்ந்துபேசுகையில் கூறியதாவது:

''இந்திரா காங்கிரஸ்-தி. மு. க-முஸ்லிம் லீக் கூட்டணி போட்டியிடும் சகல தொகுதிகளிலும் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று வெற்றிபெறுவது உறுதியாகிவிட்டது. எல்லா இடங்களிலும் எமது கூட்டணி வேட்பாளர்களையே தெரிவுசெய்ய மக்கள் உறுதிபூண்டுவிட்டனர். சில இடங்களில் நாம் தோல்வியடைந்தால் அது எமது கவலையீனமே தவிர மக்கள் ஆதரவு இல்லை என்பதல்ல''. (கு)

## நிரந்தர நியமனம்

(பண்டத்தரிப்பு)
யாழ். மாவட்டத்தில் மருத்துவ மாதர்களாக தெரிவுசெய்யப்பட்டு தங்கள் பயிற்சி நெறியை முடித்துக்கொண்ட 20 மருத்துவ மாதர்களுக்கு யாழ் மாவட்ட சுகாதார சேவை அத்தியட்சகர் இம் மாதம் 2ம் திகதி தொடக்கம் நிரந்தர நியமனங்களை வழங்கியுள்ளார்.

### வால்ட்ஹெய்ம் விஜயம்

## அமெரிக்க பணயக்கைதிகள் விடுதலைக்கு வழி கோலாது

தெஹ்ரான், ஜன. 3
ஐ. நா. பொதுச்செயலாளர் டாக்டர் குர்த் வால்ட்ஹெய்ம் ஈரான் வெளிநாட்டமைச்சர் ஜனுப் சாதிக் கொட்ஷாவேயுடன் நேற்று அமெரிக்க பணயக்கைதிகள்விவகாரம்குறித்து சுமார் மூன்று மணித்தியாலங்கள் பேச்சு நடத்தினர்.

பேச்சுவார்த்தைகள் திருப்திகரமாக இருந்ததென ஈரான் வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளபோதிலும் பேச்சுக்கள் பற்றிய விபரம் இரகசியமாகவே வைக்கப்பட்டுள்ளன.

இதே வேளையில் டாக்டர் வால்ட்ஹெய்மின் ஈரான் விஜயம் அமெரிக்க பணயக் கைதிகளின் விடுதலைக்கு வழி வகுக்காதென்றும் ஈரான் வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

டாக்டர் வால்ட்ஹெய்ம் அமெரிக்க தூதரகத்தில் இருக்கும் மாணவர்களைச் சந்திப்பது சாத்தியமில்லையென்றும் வெளியுறவு அமைச்சர் தெரிவித்தார். (இ)

# எகிப்து, இஸ்ரேலில் அமெ. இராணுவத் தளங்கள்?

வாஷிங்டன், ஜன. 3
ஆப்கானிஸ்தானில் சோவியத் யூனியன் தலையீட்டை அடுத்து மத்திய கிழக்கிலும் இந்துசமுத்திரத்திலும் தமது இராணுவபலத்தை அதிகரிக்கும் முயற்சியின் முதற்படியாக இஸ்ரேலிலும் எகிப்திலும் இராணுவத் தளங்களைஅமைப்பது குறித்து அமெரிக்காதீவிரமாக ஆலோசித்து வருகிறது.

அமெரிக்கா இராணுவத் தளங்களை அமைக்க எகிப்தும் இஸ்ரேலும் ஏற்கனவே இணக்கம் தெரிவித்துள்ளன.

### 5வது கடற்படை

பாரசீக வளைகுடாவில் புதிய 5-வது கடற்படையை அமைப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருவதாக அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மி கார்ட்டர் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் சோவியத்தலையீடு உலக அமைதிக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது என்றும் திரு. கார்ட்டர் தெரிவித்துள்ளார். (இ)

## ஆப் - பாக். எல்லையில் பலத்த மோதல்

காபூல், ஜனவரி 3
ஆப்கானிஸ்தானின் பாகிஸ்தான் எல்லைப்பிரதேசத்தில் சோவியத்யூனியன் துருப்புக்களுக்கும் முன்னாள் ஜனதிபதி அமினின் துருப்புக்களுக்குமிடையில் கடும் சண்டை நிகழ்ந்துள்ளது.

இதேவேளையில் சோவியத் யூனியன் துருப்புக்கள் வசமுள்ள காபூல் நகரிலிருந்து சோவியத்யூனியன் துருப்புக்கள் ஆப்கானிஸ்தானுக்குள் மேலும் முன்னேறிவருகின்றன என்றும் அறிவிக்கப்பட்டது. (கு)

......

## புனர்வாழ்வுத் திட்டம்

(பண்டத்தரிப்பு)
மாதாந்த பொதுசன உதவிப்புனர் வாழ்வுத் திட்டத்தின்கீழ் யாழ். சமூக சேவைத் திணைக்களம் யாழ்ப்பாணம் உதவி அரசாங்கஅதிபர் பிரிவில் ஒருவருக்கும் வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஒருவருக்கும் தலா 1000 ரூபாவை தையல் யந்திரம் வாங்குவதற்கென வழங்கியுள்ளது.

ஆடு மாடு போன்ற கால்நடைகளை வளர்த்தல் மீன்பிடித்தல் சுருட்டு சுற்றுதல் பலகாரம் சுட்டுவிற்றல் போன்ற சுயமுயற்சிகளுக்கு தலா 750 ரூபா வீதம் மாதாந்த பொதுசன உதவிப் புனர் வாழ்வுத் திட்டத்தின் கீழ் மேற்படி திணைக்களம் வழங்கிவருகின்றது.

### பொலிஸாரின் துணையோடு

# பட்டம்பெற்ற கருணாநிதி எனக்கு பதவி ஆசை என்கிருரே!

## எம். ஜி. ஆர் கலைஞரை சாடுகிருர்

சென்னை, ஜன. 3
''அண்ணாமலைப் பல்கலைக் கழகம் எனக்கு டாக்டர் பட்டம் தர முன்வந்தது. ஆனால் நான் அப்பட்டத்தை வேண்டாமென்று சொல்லிவிட்டேன். கலைஞர் கருணாநிதியோ எனக்குப் பதவி ஆசையென்று சொல்லுகிருர்.

இவ்வாறு தமிழகமுதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் மந்தைவெளியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் கூறினர்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

''பட்டம்என்றதும் அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தில் திரு. கருணாநிதிக்கு டாக்டர் பட்டம் கொடுத்ததுதான் எனக்கு நினைவுக்கு வருகிறது.

''கலைஞருக்கு 'டாக்டர் பட்டம் தருவது' என்று அண்ணாமலைப் பல்கலைக்கழகம் முடிவு செய்தது. ஆனல் மாணவர்கள் அதனை எதிர்த்தார்கள். பொலிசாரின் துணையோடு அவர் டாக்டர் பட்டம் பெற்ருர். அப்போது உதயகுமார் என்ற மாணவர் இறந்தார். இறந்தவர் தமது மகனல்ல என்று அவனது தாய், தந்தையரை திரு. கருணாநிதி சொல்லவைத்தார். ஆனல் பிறகு விசாரணையில் இறந்தவன் உதயகுமார் தான் என்று வெளி வந்தது. அந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகம்தான் டாக்டர் பட்டம் தர முன்வந்தது. ''எனக்குப் பட்டம் வேண்டாம். தயவு செய்து நீங்களே அதை வைத்துக்கொள்ளுங்கள் என்று அறிவித்துவிட்டேன்''. (ஓ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**REGAL** (Jaffna)
Daily at 2-30, 4-30, 7-00 & 9-30 P. m.

Your last chance to re-live the greatest moments of movie musical magic...

Fred Astare, Gene Kelly, Frank Sinatra, Bing Crosby, Clark Gable, Spencer Tracp, Katherine Hepburn, Judy Garland, The Marx Brothers Laural & others...

**That's Entertainment Part-2**

100வது வெற்றித் திருநாளை நோக்கி ஓடுகிறது!
மனோஹரா A யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, சுஜாதா, சந்திரமோகன், கவிதா நடித்த
அந்தமான் காதலி
(வர்ணப்படம்)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி: 10.30, பி.ப. 2.30, 6.00, 9.30
சிவாஜி, ஜெயலலிதா
ஜி.வரலட்சுமி நடித்த
(புத்தம் புதிய பிரதி)
தாய்

100-வது வெற்றித்திருநாளை நோக்கி
சாந்தி (யாழ் நகர்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
போன்: 7642
ஜெய்சங்கர் ஸ்ரீதேவி எம்.ஆர்.ராதா
அசோகன் ஸ்ரீகாந்த் மனோரமா சுருளி நடித்த
டாக்ஸி டிரைவர்
வண்ணத்திரையோவியம்

A Hilarious Action Comedy Film For All Ages
**RANEE** (JAFFNA) Daily at: 10-30, 2-15, 4-45, 7-15 & 9-45 p.m.
Terrence Hill Bud Spencer
Team up As A Pair Of Miami Beach Combers Dominate The Police
Uniform Go About Busting Cars And Crooks In Warner Brothers Presentation
**CRIME BUSTERS**

100-வது வெற்றித்திருநாளை நோக்கி
ஸ்ரீதர் (யாழ் நகர்) தினசரி காலை 10-30, பி. ப. 2-30, 6-15, 9-15
சிவாஜிகணேசன்-சுஜாதா நடித்த
தீபம்
(வெள்ளிவிழாச் சித்திரம்)
(வர்ணக்கலர்)

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, விஜய[illegible] மனோரமா, தேங்காய் சீனிவாசன் நடிக்கும்
ஜெனரல் சக்கரவர்த்தி
(ஈஸ்ட்மன் கலர்) டைரக்ஷன்: யோகானந்த்
குடும்பத்துடன் பார்க்கவேண்டிய படம்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
7-1-80 முதல்
பாலைவன சோலை
பந்தாட்டம்

லிடோ (யாழ். நகர்) தினசரி: 10-30, 2-30, 6-30, 9-30
போன்: 7693
வெள்ளிக்கிழமை விரதம்

# 1145 பஸ்வண்டி சேவையில் ஈடுபட்டது! 703 நிறுத்தப்பட்டது

## போக்குவரத்து

(புதன்கிழமைத் தொடர்ச்சி)

தெருக்கள் பயணிகள் போக்குவரத்து, போக்குவரத்துச் சபையின் (இலங்கை மத்திய போக்குவரத்துச்சபையும் ஒன்பது பிரதேச சபைகளும்) தனியுரிமையாகவே இருந்து வருகிறது. பயணிகள் போக்குவரத்தில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு ஈடுகொடுக்கும்வகையில் பேருந்துப் பணிகளால் தொழிற்படுத்தப்பட்ட கிலோமீற்றர்களில் ஏற்பட்ட அதிகரிப்பு இருக்கவில்லை. இது 1978 ல் போக்குவரத்துப் பணியில் கூடியளவில் முயற்சிகள் மேற்கொள்வதற்கு வழிவகுத்தது. ஏறக்குறைய 700 புதிய பேருந்துகளும், 445 மீள திருத்தப்பட்ட உந்துகளும் தெருக்களில் ஈடுபடுத்தப்பட்ட போதிலும், 703 பேருந்துகள் பணியிலிருந்து நீக்கப்பட்டன. தொழிற்படுத்தப்பட்ட பேருந்துக்களின் எண்ணிக்கை தேவைப்பட்ட எண்ணிக்கையிலும் 14 சதவீதம் குறைவானதாகும். பேருந்துப் பயணத்திற்கான கட்டணங்கள் கூட்டப்பட்ட போதிலும், அவைகள் சபையின் அதிகரித்துச் செல்லும் செலவினத்தினை ஈடு செய்வதற்குப் போதியதாக இல்லாமையால் சபை ரூ. 550 இலட்சம் கொண்டதொரு நட்டத்தில் இயங்கியுள்ளது. தொழிலில் அமர்த்தப்பட்ட புதிய ஊழியரின் எண்ணிக்கை இரட்டித்ததோடு, 1978 ல் பேருந்து ஒன்றுக்கு 12 ஊழியர்கள் இருந்தனர். 1978 ல் இழக்கப்பட்ட கிலோமீற்றர்கள் 920 இலட்சமாகும். இதில் 10 சதவீதம் ஊழியர்கள் வருகை தராமையால் ஏற்பட்டுள்ளது. (பக்கம்-89-91)

**1978ம் வருடத்திய மத்திய வங்கியின் பொருளாதார மீளாய்வு**

## புகைவண்டி

பயணிகள் கிலோமீற்றர்கள் 27 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. இம்மாற்றத்திற்கு தெருப் போக்குவரத்தில் ஏற்பட்ட கட்டண அதிகரிப்புக் காரணமாக இருக்கலாம். பொருட்கள் கொண்டு செல்லல் 12 சதவீதத்தால் அதிகரித்தது. புகைவண்டித் திணைக்களத்தின் இழப்பு 1977 ல் ரூ. 1660 இலட்சத்திலிருந்து 1978 ல் ரூ. 1570 இலட்சமாக வீழ்ச்சியுற்றது. (பக்கம்-91)

## மின் வலு

கடந்த ஆண்டுகளில் 5 நாடக்கம் 7 சதவீதமாக விளங்கிய மின் உற்பத்தி 1978 ல் 13 சதவீதத்தால் பெருமளவில் அதிகரித்துள்ளது. விற்பனைகள் 11 சதவீதத்தால் அதிகரித்துள்ளமை, பொருளாதாரத் தொழிற்பாடுகளின் அதிகரிப்பினைக் காட்டுகிறது. மின்சார சபையின் நடைமுறையிலுள்ள அபிவிருத்தித் திட்டங்களை சீர்தாக்க[illegible]பார்க்கின் மின்வலுவிற்கான கேள்வி தொடர்ந்தும் இதே விரைவில் கூடிச் செல்லுமானால் எதிர்காலத்தில் மின்வலு பற்றுக்குறை ஏற்படுவதற்கு பெருமளவு வாய்ப்புக்கள் உள்ளன. எனவே கிராமிய மின்னூட்டல் திட்டங்களை மெதுவாகச் செயற்படுத்தல் இன்றியமையாததாகலாம். (பக்கம்-93-95)

## அஞ்சல் தொலை தொடர்புகள்

1978 ல் அஞ்சல் பணிகள் ரூ. 170 இலட்சம் கொண்டதொரு மிகையைப் பதிவு செய்த வேளையில் தொலை தொடர்புப் பணிகள் ரூ. 590 இலட்சம் கொண்டதொரு மிகையினைப் பதிவு செய்துள்ளது. எனினும் இதுவரை இப்பணிகள் நாட்டில் ஏற்பட்டு வரும் அபிவிருத்திகளுடன் ஈடுகொடுக்கக் கூடியதாக இல்லை. (பக்கம்-95-96)

## கல்வி

1977 ல் கல்வி முறையில் முன்னேற்றகரமான சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. முதலாவது பள்ளிக்கூட நுழைவுக்கான வயதெல்லை ஒரு ஆண்டால் குறைக்கப்பட்டதுடன் இளநிலை தொடக்கக் கல்விக்காலம் ஒரு ஆண்டால் கூட்டப்பட்டது. இரண்டாவதாக 1972 தொடக்கம் நடைமுறையிலிருந்து வந்த முன்னைய கல்வி முறை ஏறக்குறைய முற்றாக மீளக் கொண்டுவரப்பட்டது. வெளிநாட்டுக் கல்விக்கான செலாவணிக்கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. கல்வி முறையில் பொருளாதாரத்தின் தேவைகளை விட பன்முகட்டு ஒப்பீட்டு முறையே பெரிதும் வலியுறுத்தப்பட்டது. தொழில் நுட்பக் கல்வி முறை புதிய உயர்கல்வி அமைச்சின் கீழ் ஊக்குவிக்கப்பட்டது. (பக்கம்-96-102)

## நலத்துறை

கல்வித்துறையைப் போன்று பல ஆண்டுகளாக நலத்துறையின்மீதான அரச செலவினத்தின் பங்கு குறைந்து காணப்பட்டபோதிலும் 1978 ல் நலத்துறையினைச் சீர்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. (பக்கம்-103-105)

## தொழில் நிலை

மத்திய வங்கி, 1973 ல் தொழிலின்றி இருந்தோரின் எண்ணிக்கை 10 இலட்சம் என மதிப்பிட்டுள்ளது. 1978 ல் மத்திய வங்கியால் நடாத்தப்பட்ட அளவீட்டின் தற்காலிகத் தரவு 1973 ன் பின்னர் தொழிலின்மை ஏறக்குறைய 10 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றமையைச் சுட்டிக்காட்டுகிறது. (பக்கம்-106)

1978 ல் கொண்டுவரப்பட்ட புதிய தொழில்தரவு வங்கி முறை பழைய தொழில்காண் நிலை முறையினை இல்லாமற் செய்தது. 1978 ல் அரச திணைக்களங்கள், அரசு சார்பு நிறுவனங்கள் ஆகியவற்றின் தொழில்வாய்ப்புக்கள் 6 சதவீதத்தால் அதிகரித்துள்ளன. (பக்கம்-108-111)

## விலைகள்

மொத்த விற்பனை விலைச் சுட்டெண் 1977 ல் 20.9 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1978 ல் 15.8 சதவீதத்தால் உயர்வடைந்துள்ளது. மொத்தத் தேசிய உற்பத்திச் சுருக்கி (பழைய தொடர்கள்) முன்னைய ஆண்டில் விலைகளில் ஏற்பட்ட 16 சதவீத அதிகரிப்பிற்கு மாறாக 1978 ல் விலைகளில் ஏற்பட்ட 15 சதவீத அதிகரிப்பினைக் காட்டுகிறது. பொது விலைமட்டங்கள் முன்னைய ஆண்டிலும் குறைந்த வீதத்தில் 1978 ல் ஏறக்குறைய 16 சதவீதத்தால் அதிகரித்துள்ளமையை இது எடுத்துக்காட்டுவதாக அமையலாம். இது நாணய பெறுமானத்தேய்வு, கூலி அதிகரிப்புக்கள், நுகர்வோர் உதவு தொகை அளவில் செய்யப்பட்ட குறைப்பு, விலைக்கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டமை ஆகியவற்றினைத் தொடர்ந்து ஏற்பட்ட விலை அதிகரிப்புக்களைக் கட்டுப்படுத்துவதில் அடைந்த ஓரளவு வெற்றியைக் காட்டுகிறது. (பக்கம்-117-120)

[நாளை தொடரும்]

# 2 சக்கர உழவு யந்திர விலைகள் குறைப்பு

(கொழும்பு)

2 சக்கர உழவு வண்டிகளின் விலை குறைக்கப்பட்டுள்ளது. இத்தகவல் நேற்று அறிவிக்கப்பட்டது.

குபாட்டோ மார்க் உழவு யந்திரங்களின் விலை 23750 ரூபாவிலிருந்து 21500 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது. ஜன்மா ரக உழவுயந்திரங்களின்விலை 22750ரூபாவிலிருந்து 20 ஆயிரம் ரூபாவாகக்குறைக்கப்பட்டுள்ளது.

வர்த்தக மந்திரி திரு. அத்துலத்முதலி இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

# முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் வெள்ளிவிழா

## பெப்ரவரியில் யாழ். நகரில் நடைபெறும்

[யாழ்ப்பாணம்]

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் இருபத்தைந்து ஆண்டுகால நிறைவையொட்டியும், அதன் சாதனைகளை மறுமதிப்பீடு செய்து நினைவுகூருமுகமாகவும்வெள்ளிவிழாக்கொண்டாட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

மூழு நாள் இலக்கியவிழாவாக எதிர்வரும் பெப்ரவரி மாதக்கடைசியில் யாழ்ப்பாணத்தில் இவ்விழா கொண்டாடப்படவிருக்கின்றது.

பல்வேறு சுவையான நிகழ்ச்சிகளையும் உள்ளடக்கிய விழா நிகழ்ச்சிகளில் சிறப்பாகத் தமிழகத்திலிருந்தும் எழுத்தாளர்களும், பேராசிரியர்களும் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர்சங்கத்தின் இலக்கிய ரீதியான பெருவளர்ச்சிப்பங்களிப்புக்களைப்பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெள்ளிவிழா நிகழ்ச்சியில் சிறப்பாக இடம்பெறவுள்ளது. (நா)

## வருடாந்த உற்சவம்

(மன்னார்)

மன்னார் உப்புக்குளம் சித்தி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 13ந்திகதி ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது. (ச)

(முல்லைத்தீவு)

ஊர்காவற்றுறைப் பகுதிக் கடற்றொழில் பரிசோதகர் கு. ச. சிவநேசன், இப்பகுதி கூட்டுறவு அபிவிருத்திப் பணியில் கடந்த நான்கு வருடங்களாக சேவையாற்றி, தனது சொந்த விருப்பின்பேரில் இம்மாதம் தொடக்கம் முல்லைத்தீவுப் பகுதிக்கு இடம்மாறியுள்ளார்.

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெய்சங்கர் - விஜயலக்ஷ்மி
வல்லவன் ஒருவன்

நா[illegible] (சுன்னாகம்)
தி[illegible] -15, 10-00
[illegible] ஞாயிறு 2-15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Dilka Watch Works**
SPECIALIST IN WATCHREPARING
யாழ் நகரில் சகலவித மணிக்கூடுகளையும்
சிறந்த முறையில்
திருத்திக்கொள்ள...


**டில்கா வாச் வேக்ஸ்**
பஸ் நிலைய எதிர் மேல்மாடி.
404/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**ஈழநாடு** The EELANAADU 50 சதம்

## தலைமன்னார் துறைமுகப் பகுதியை அபிவிருத்தி செய்யத் திட்டம்

(மன்னார்)

தலைமன்னார் துறைமுகப் பகுதியை அபிவிருத்தி செய்ய திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்அபிவிருத்திக்குரிய திட்டங்களை மன்னார் அரசாங்க அதிபர் திரு. கமிலஸ் பெர்னாண்டோ தயாரித்துவருகிறார்.

கடந்தமாதம் மன்னாருக்கு விஜயம் செய்திருந்த போக்குவரத்து அமைச்சர் திரு. எம். எம். முகமதுவின் பணிப்புரையின் பேரிலேயே இத்திட்டம் தயாரிக்கப்பட்டுவருகிறது.

பெருமளவில் வந்துள்ளன
உடனே வாங்கலாம்.
**FALCON SCOOTERS**
- மிகவும் சொகுசானது
- "அதிக கவர்ச்சி மிக்கது
- "எல்லோரும் விரும்புவது
**பல்க்கன் ஸ்கூட்டர்கள்**
பல்க்கன் ஏஜென்சி,
ஐந்துசந்தி, யாழ்ப்பாணம்.
போன்: 685

# சாராயத் தவறணைகள் மதுச்சாலைகளாக மாற்றம்

[யாழ்ப்பாணம்]

சாராயத் தவறணைகள் யாவும் மதுசாலைகளாக மாற்றப்பட்டுள்ளன. இந்த மதுசாலைகளில் முழுப்போத்தலாக சாராயம் வாங்கிச்செல்ல முடியாது. சில்லறையாகவே சாராயம் வாங்கமுடியும். அத்துடன் அச்சாராயத்தைவெளியில் கொண்டுசெல்ல முடியாது மதுசாலையிலேயே வைத்துக் குடிக்கவேண்டும்.

இவ்வருடம்முதல் இப்புதிய திட்டம் அமுலுக்கு வந்துள்ளது.

முன்பு சாராயத்தவறணைகளில் முழுப் போத்தலாக வாங்கிச்செல்லலாம். தற்போது அது நிறுத்தப்பட்டுள்ளது. வெளிநாட்டுக் குடிவகைக் கடைகளில் மட்டுமே முழுப்போத்தலாக சாராயம் வாங்கிச்செல்ல முடியும்.

சாராயத் தவறணைகளில் முன்பு கல்லோயா சாராயம் 19ரூபா 20 சதத்துக்கும், தென்னஞ்சாராயம் 22 ரூபா 80 சதத்துக்கும் விற்பனை செய்யப்பட்டது. வெளிநாட்டு குடிவகை நிலையங்களில் மட்டும் தற்போது கல்லோயா சாராயத்தை 21 ரூபாவிற்கும், தென்னஞ் சாராயத்தை 24 ரூபா 75 சதத்திற்கும் பெற்றுக் கொள்ளலாம்.

சாராய அளவுகளும் புது வருடத்துடன் மெற்றிக் முறைக்கு மாற்றப்பட்டுள்ளது. 1 கலன் சாராயம் 4.5 லீற்றராகும். 1 போத்தல் (8ரும்) .75 லீற்றராகும்.

1 ரும், அரை ரும், கால் ரும் சாராயம் எல்லாம், லிற்றர் முறையில் விற்பனை செய்யப்படும்.

சாராயத் தவறணைகள் யாவும் மதுசாலை (றெஸ்ரோறன்ற்) என மாற்றப்பட்டுள்ளது. இந்த மதுசாலைகளில் இருந்து சாராயம் குடிக்கவும், சாப்பிடவும் வசதிகள் செய்யப்படும்.

சாராய மதுசாலைகள் (முன்னைய தவறணைகள்) காலை 11 மணி முதல் பிற்பகல் 2 மணி வரையும், பிற்பகல் 5 மணி முதல் இரவு 8 மணிவரையுமே திறந்துவைக்கப்படும். மற்ற நேரங்களில் விற்பனை நடைபெற்றால் குற்றமாகும். பெரும் ஹோட்டல்களில் காலை 11 மணி முதல் 2 மணிவரையும், பிற்பகல் 5 மணி முதல் இரவு 11மணி வரையும் மதுபானம் சில்லறைக்கு விற்பனை செய்யப்படும்.

வெளிநாட்டு மதுவகை விற்பனை நிலையங்களில் வழக்கம் போல் காலை 8 மணி முதல் இரவு 8மணிவரை விற்பனை நடைபெறும்.

கள்ளுத் தவறணைகளில் காலை 11 மணி முதல் 2 மணி வரையும், பிற்பகல் 5 மணி முதல் இரவு 8 மணிவரை விற்பனை நடைபெறும்.

மதுசாலைகளில் போத்தலாக வாங்கி அங்கு வைத்துக் குடிக்கலாம். வெளியில் கொண்டு செல்வது குற்றமாகும். (க)

## "கடமையுணர்வோடு சேவையாற்ற வேண்டும்"

### பிரிவுபசாரவைபவத்தில் நீதிபதி அறிவுரை

(அரியாலை)

பாதுகாப்பு ஊழியர்களாகக் கடமையாற்றுவோர் கடமையுணர்வோடு சேவையாற்றவேண்டும். இலங்கையின் எந்தப்பாகத்தில் சேவையாற்றினாலும் இவர்கள் தமது கடமையின் பொறுப்பை உணர்ந்து சேவையாற்ற வேண்டும். தம்மிடம் பாதுகாப்பாக ஒப்படைக்கப்படும் சந்தேகநபர்களை மிகவும் அனுசரணையுடன் நடாத்துவதின் மூலம் இத் தொழிலுக்கு பெருமையை ஏற்படுத்தலாம்"

இவ்வாறு, பருத்தித்துறை மாஜிஸ்ரேட் நீதிமன்ற நீதிபதி திரு. கே. ஞானச்சந்திரன் பருத்தித்துறை நீதிமன்ற சிறைச்சாலை பாதுகாப்பு ஊழியர்களாகப் பணியாற்றி இடமாற்றம்பெற்றுச் செல்லும் ஊழியர்களுக்கென நடாத்தப்பட்ட பிரிவுபசார தேநீர் விருந்துபசாரத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

பாதுகாவலர் உதவி பொறுப்பதிகாரி திரு. சென். யோண் ராசா மேற்படி வைபவத்திற்குத் தலைமை வகித்தார்,

இடமாற்றம் பெற்றுச் செல்வோரின் சேவைநலம் குறித்துப் பலர் பேசினார்கள்.

**மக்கினென் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்டெட்**

உங்களை
திருச்சிராப்பள்ளி,
மதுரை, பம்பாய்,
கோலாலம்பூர்,
சிங்கப்பூர், பரிஸ்,
லண்டன், துபாய்,
சவூதி அரேபியா,
கனடா
ஆகிய நாடுகளுக்கு
அழைத்துச் செல்ல

மற்றும்
பாஸ்போட்,
அமெரிக்கன்
டிறவலர்ஸ் செக்
உலகின் எப்பகுதிக்கும்
விமான டிக்கட்,
சுற்றுலாக்கள்
ஆகிய உங்கள்
தேவைகளை

கொழும்பு செல்லாமலே யாழ்ப்பாணத்தில்
ஒழுங்குசெய்துகொள்ள
இன்றே தொடர்புகொள்ளுங்கள்

**மக்கினென் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்.,**

தபால்பெட்டி இல: 92
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8154

**பணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது!**

## இலங்கை அரசு...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

டிருப்பதாக புதுடில்லி செய்தியொன்று கூறுகிறது.

ஆப்கானிஸ்தானில் 35-40 ஆயிரம் சோவியத் துருப்புகள் இருப்பதாகவும் நாட்டின் ஏனைய பகுதிகளையும் கட்டுப்பாட்டில் கொண்டுவரும் பொருட்டு தலைநகரிலிருந்து ஏனைய பகுதிகளுக்கும் சோவியத் துருப்புகள் அனுப்பிவைக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது.

ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியிலும் இதே எண்ணிக்கையில் சோவியத்துருப்புகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனவாம்.

## இலவசப் புத்தகங்கள் அமைச்சர் தரும் மற்றுமொரு விளக்கம்

(மன்னார்)

''முதலாம் வகுப்பு மாணவர்களுக்கு இரண்டு புத்தகங்களும், மற்றைய மாணவர்களுக்கு 4 புத்தகங்களும் முதலில் இலவசமாக வழங்கப்படும். மிகுதிப் புத்தகங்கள் பின்னர் விரைவில் வழங்கப்படும்.''

இவ்வாறு இலவச பாடநூல்கள் வழங்குவது தொடர்பாக மன்னாரில் நடைபெற்ற பாடசாலை அதிபர்கள் மகாநாட்டில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய கல்விச் சேவைகள் அமைச்சர் திரு. லயனல் ஜயத்திலக கூறினார்.

மன்னார் அல்அஸ்ஹார் மகா வித்தியாலயத்தில் பிரதம கல்வி அதிகாரி ஜனாப் சரிபு தலைமையில் நடைபெற்ற இம் மகாநாட்டில் மன்னார் மாவட்ட அமைச்சர் ஜனாப் மஹ்றூப், மன்னார் எம், பி. திரு. பி எஸ், சூசைதாசன், மன்னார் அரசாங்க அதிபர் திரு, கமிலஸ் பெர்னாண்டோ மற்றும் கல்வி அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

அமைச்சர் திரு. ஜயத்திலகா தொடர்ந்து கூறியதாவது:

''நான் ஏழைமக்களோடு பழகி அவர்களது நிலைமைகளை நன்கு உணர்ந்துதான் இப்போது உங்கள் முன் வந்திருக்கிறேன். அதிக புத்தகங்களை மாணவர் மத்தியில் புகுத்தி மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் அதிக கஷ்டத்தைக் கொடுக்கக்கூடாது. பாடத்திட்டங்களை இனிமேல் மாற்ற முடியாதபடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மிகவும் நல்லமுறையிலேயே பாடத்திட்டங்கள் அமுல்செய்யப்படும்.

அரசாங்க அச்சக திணைக்களத்தில் மாணவர்களுக்கு வேண்டிய அளவு புத்தகங்கள் அச்சடிப்பதில்லை, ஏனெனில்பத்து வீகித மாணவர்களே தமக்குத் தேவையான புத்தகங்களை வாங்குகிறார்கள். மிகுதி மாணவர்கள் தமக்குத் தேவையான புத்தகங்களை வாங்குவதில்லை.

''முதலாம் வகுப்பு முதல் 10ம் வகுப்புவரை 30 லட்சம் மாணவர்கள் படிக்கிறார்கள், சில வகுப்பு மாணவர்களுக்கு அவசியமான புத்தகங்கள் நாலும், முதலாம் வகுப்பு மாணவர்களுக்கு ரெண்டு புத்தகங்களும் முதலில் கொடுக்கப்படும். மிகுதிப் புத்தகங்கள் விரைவில் கொடுக்கப்படும். இதுவரை 52 வகையான புத்தகங்களே அச்சடித்து முடிக்கப்பட்டுள்ளது. இன்னும் 114 வகையான புத்தகங்கள் எழுதி அச்சடிக்க வேண்டியுள்ளது.

290 வட்டாரக்கல்வி அதிகாரிகளுக்கும் புத்தகங்கள் அனுப்பிவைக்கப்படும். புத்தகங்களை விநியோகிக்கும் மத்திய நிலையம் மகரகமையில் அமைந்துள்ளது. இங்கு 30 ஏக்கரில் கட்டப்பட்ட ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை புத்தகங்களால் நிரம்பிவிட்டது. அதனால் பக்கத்தில் உள்ள ஜனாதிபதி வித்தியாலயத்தையும் எடுத்து புத்தகங்களை வைக்க முடிவு செய்துள்ளோம். இவ்வாறு அமைச்சர் கூறினார். (கு)

## தமிழ்நாட்டில்...

என்ற முதுபெரும் மூதாட்டி தனது 83 வயது மகளுடன் வந்து வாக்களித்தார்.

கடலூர் தொகுதியில் வாக்குப்பதிவு செய்யச்சென்ற நோயாளி பெண் ஒருவர் வாக்களித்து விட்டுவீடு திரும்பியதும் மரணமானார் பொலிஸ் கான்ஸ்டபிளின் மனைவியான இவர் உறவினர்கள் தடுத்ததையும் மீறி மாட்டுவண்டியில் வாக்களிக்கச் சென்றார்.

சிர்பேதும்பூர் லோகசபை தேர்தல் தொகுதியில் வாக்களிக்கச் சென்ற 85 வயது வாக்காளர் ஒருவர் வாக்குச் சீட்டை தேர்தல் அதிகாரியிடமே கொடுத்துவிட்டுபோய் விட்டார். தாம்வாக்களிக்க வந்த வாக்காளர்பெயரையும் சின்னத்தையும் மறந்துவிட்டதாக அவர் கூறினார். பெரியகுளம் தொகுதியிலுள்ள தேனியில் அ.தி.மு.கத் தொண்டர்களுக்கும் தி. மு. கத் தொண்டர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் 20 பேர் காயமடைந்தனர். கலவரத்தை அடக்க பொலிசார் தடியடிப்பிரயோகம் செய்தனர். சேலப்பட்டியில் ஏற்பட்ட போட்டிக் கட்சியாளர் மோதலில் ஒருவர் காயமடைந்தார்.

## பலதிருட்டுகள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இம்மாதம் 1ம் திகதி அதிகாலை ரோந்துசுற்றிவந்த பொலிசார் இவர்களைக் கைதுசெய்தனர், புவாக்பிட்டியைச் சேர்ந்த நந்தகுமார் மதுரைவீரன், கச்சேரியடியைச்சேர்ந்த சரவணை ரகுநாதன் ஆகிய இருவருமே சந்தேகநபர்களாகும்.

விசாரணையின்போது கிடைத்த தகவல்களைக்கொண்டமற்றும் இரு சந்தேகநபர்களைப் பொலிசார் தேடிவருகின்றனர்.

இவ்விசாரணையின் பயனாக திருட்டுப்போன பல சயிக்கிள்கள் கிடைக்கும் எனஎதிர்பார்க்கப்படுகிறது. (க)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் ஜனவரி மாதம் 4-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No GE/894/78 The Eelanadu P. B. No. 49, Tlegram Eelandu. Phone 389

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org